# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்


## புதிதாய் வாழும் குழலில் வதிந்திட வாராய் குலமகனே!

இறைதந்தையின் பரிவுள்ளத்தினதும்
நிறை வாழ்வருளும் இரக்கத்தினதும்
விடியலாய் விண்ணகம் விட்டே
மடிந்திடும் மண்ணவர்க்காய்ப் பிறந்தவரே!

மார்கழிக்கடும் குளிர்மேவும் பொழுதினில்
காரிருள் சூழ்ந்திடும் நடுநிசிதனில்
பாரின் ஒளியாய் உதித்த பாலகனே
வாரீர் எம் இதயக் குடிலில் உறைந்திடவே!

S.M.வுளோறன்ஸ்



பாதுகாவலன்
வாசக
நெஞ்சங்களுக்கு
அமைதி பொங்கும்
கிறிஸ்மஸ்
புதுவருட
நல்வாழ்த்துக்கள்
உரித்தாகுக ...

- ஆசிரியர் -


පාදුකාවලන්

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 222 2378 Fax: 021 222 9041, ISSN 1391-7633

மலர் : 140 இதழ் : 22 பக்கங்கள் : 16 திகதி : 25.12.2016 விலை : 40.00




## நமது மகிழ்ச்சியை தேவைகளோடு வாழ்வோரோடு பகிர்ந்துகொள்வோம்

### யாழ் ஆயரின் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துச் செய்தி

வருடாவருடம் நாம் கொண்டாடும் கிறிஸ்து பிறப்பு விழா எம் எல்லோருடைய உள்ளங்களிலும் இல்லங்களிலும் ஒரு இனம் தெரியாத மகிழ்ச்சியைக் கொண்டுவருகின்ற ஒரு விழாவாகும். அதற்குக் காரணம் என்னவென்றால் மனிதர் விடுதலைபெற, வாழ்வு பெற இறைவன் மனிதனாக வந்துதித்து தன் அளவு கடந்த அன்பை வெளிப்படுத்திய நாளே கிறிஸ்மஸ் தினமாகும். "இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" எனும் மகிழ்ச்சியின் நற்செய்தி அறிவிக்கப்பட்ட நேரத்திலிருந்து இறைவனின் வல்லமையான பிரசன்னம் கிறிஸ்துவழியாக எம் மத்தியில் குடிகொண்டதை ஒவ்வொரு கிறிஸ்மஸ் தினமும் எமக்கு நினைவூட்டுகிறது. இதுவே எம் மகிழ்ச்சியின் காரணமாகும்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## நல்லிணக்கத்தின் தூதுவர்களாக எம்மை அர்ப்பணிப்போம்

### இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் கிறிஸ்மஸ் செய்தி

இறைவனின் தூய திட்டத்திற்கு எதிரான அனைத்து விடயங்களிலும் நாம் மாற்றம் கண்டு, அமைதியின், நல்லிணக்கத்தின், ஒப்புரவின் தூதுவர்களாக எம்மை நாம் அர்ப்பணிக்க வேண்டுமென "இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை" அழைப்புவிடுத்துள்ளது.

கிறிஸ்மஸ் கொண்டாட்டம் என்பது வெறுமனே ஒரு நடந்து முடிந்த நிகழ்வை நினைவுபடுத்தும் ஒன்றாக அமைந்துவிடக்கூடாது. மாறாக, எமது வாழ்வின் உண்மையான பெறுமதியை ஆழமாக உணர்ந்து, அதன் முழுமையை நாம் வாழும் சமுதாயத்தில் சான்றுபகரும் நிகழ்வாகும் என்றும் அது வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

(இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் முழுமையான அறிக்கையை 3ம் பக்கத்தில் காணலாம்)



## ஒப்புரவில் இயேசு பிறக்கின்றார்

### குருமுதல்வரின் நத்தார் செய்தி

இறைவன் மனிதானாக, பாலன் இயேசுவாக இவ்வுலகில் பிறந்ததன் ஒரே நோக்கம் மனிதனை இறைவனோடும், மனிதனை மனிதனோடும் ஒப்புரவாக்கவே. தனது வாழ்வாலும், போதனைகளாலும், பாடுகளினாலும், மரணத்தினாலும், உயிர்ப்பினாலும் தனது ஒப்புரவுப் பணியை நிறைவேற்றினார் இயேசு.

இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் எமக்கும் இன்று தரப்பட்டுள்ள பணியும் சவாலும் இந்த ஒப்புரவுப் பணியேயாகும்.

நீண்டதொரு கொடுமையான யுத்தத்தைச் சந்தித்த நாம், அந்த யுத்த வரலாறு முடிந்து இன்று ஒப்புரவு வரலாற்றில் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இன்று எமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய, மன்னிக்க, ஒப்புரவாகப் பயன்படுத்த வேண்டும்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## 80வது பிறந்தநாளைக் கொண்டாடினார் திருத்தந்தை

தனது எண்பதாவது பிறந்த நாளான, டிசம்பர் 17, சனிக்கிழமையன்று, வத்திக்கானின் அப்போஸ்தலிக்க மாளிகையிலுள்ள, பவுலின் சிற்றாலயத்தில், கர்தினால்களுடன் சேர்ந்து, கூட்டுத்திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை, இறைவனைப் பற்றிய நினைவே, கிறிஸ்தவ வாழ்வைக் குறித்துக் காட்டுவதாகவும், அவ்வாழ்வில் முத்திரை பதிப்பதாகவும் இருக்கும் என்று கூறினார்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



## பொன்விழாக் காணும் அருட்கலாநிதி S. J. இம்மானுவேல் அடிகளாரை வாழ்த்துகிறோம்

யாழ். மறைமாவட்டத்தின் மூத்த குருவும், முன்னாள் குரு முதல்வரும், முன்ஸ்ரர் மறை மாவட்டத்தின் முன்னாள் பங்குத் தந்தையும், தமிழ் மக்களின் வாழ்வியற் போராட்டத்தின் நீதிக்குகுரலும், யேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் ஆலோசகருமான அருட்தந்தை பேராசிரியர் எஸ். யே. இம்மானுவேல் அடிகளார், தன் அருட்பணி வாழ்வில் பொன்னான ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்கிறார்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# அன்னை மரியாவையும், புனித யோசேப்பையும் போல கிறிஸ்மஸ் விழாவை, அமைதியில் செலவிடப் பழகுவோம்

## திருத்தந்தை அழைப்பு



இறைவன் மனிதரிடம் நெருங்கி வந்த விழாவின் அருளைப் பெறும் நோக்கில், இவ்விழாவை, அமைதியில் செலவிடப் பழகுவோம் என அழைப்பு விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.மனிதர்களுடன் கொள்ளும் நெருக்கம், அன்பு, தாழ்ச்சி, கனிவு ஆகிய அருள்களை உள்ளடக்கிய கிறிஸ்து பிறப்பின் உண்மை உணர்வைப் பெற ஒவ்வொருவரும் முயல்வோம் என அழைப்பு விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அன்னை மரியா மற்றும் புனித யோசேப்பு ஆகியோரின் சோர்வையும் மகிழ்வையும் நமக்கு விளக்கும் இடமாக கிறிஸ்மஸ் குடில் உள்ளது என்றார்.

இறைவனை வரவேற்பதில் பெருவிருப்பத்தை வெளிப்படுத்திய அன்னை மரியாவும், இறைவிருப்பத்தை முழு நம்பிக்கையுடனும் தாழ்ச்சியுடனும் ஏற்று அதனைப் பின்பற்றிய புனித யோசேப்பும் அன்பின் மறையுண்மையில் முழுவதுமாக தங்களை ஈடுபடுத்தியவர்கள் என்ற திருத்தந்தை, நமக்குள்ளும் கொடையாக வழங்கப்படும் இறைமகனை நாம் எவ்வாறு வரவேற்கிறோம் என்பது குறித்துச் சிந்திப்போம் என்றார்.

இயேசுவின் வருகைக்கு ஆம் என்று சொல்லி, அன்னை மரியா ஏற்றுக்கொண்டாதால், உலகின் தலைவிதியே மாறியது என்பது போல், நாமும் இயேசுவை ஏற்று, அவர் வழியில் நடக்கும்போது, நமக்கும் உலகுக்குமான மீட்பின் திட்டத்தில் ஒத்துழைக்க முடியும் எனவும் கூறினார் திருத்தந்தை.

தன்னால் புரிந்துகொள்ள முடியாதவைகளையும், இறைவனின் துணையோடு புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்ட புனித யோசேப்பின் செயல், இறைவனில் நாம் வைக்கவேண்டிய விசுவாசத்தையும், நம் கீழ்ப்படிதலையும் கற்றுத்தருவதாக உள்ளது என மேலும் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# தாழ்ச்சி என்றால் என்ன என்று மரியன்னையிடம் கற்றுக்கொள்வோம்



சிலருக்கு இது ஒரு தீராத நோய். நான்தான் பெரியவன், நான்தான் எல்லாம் அறிந்தவன், நான்தான் சிறந்த திறமைசாலி என, தன்னை மட்டுமே முன்னிலைப் படுத்திக்கொண்டிருக்கும் நோய். சிலவேளைகளில், தன்னை முன்னிலைப்படுத்தி தற்பெருமைக் கொள்வது, வாழ்வின் எதார்த்தமாகவே மாறிவிடுகின்றது. ஆனால், பெண்களுக்குள் பேறுபெற்ற, கடவுளின் அருளை அடைந்த அன்னைமரியா, இதோ அடிமை என்று தன்னைத் தாழ்த்திக் கொள்கிறார். தான் கடவுளின் தாய் என்ற ஆணவத்திற்கு ஒருபோதும் இடம் கொடுத்ததேயில்லை. இத்தகைய ஒரு புண்ணியம் நிறைந்த தாழ்ச்சி பாதைக்கு, கிறிஸ்து பிறப்புவிழா அழைப்பு விடுக்கிறது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# இரக்கத்தின் ஆண்டின் கனிகளை, துன்புறும் ஏழை மக்கள் அறுவடை செய்யட்டும்!

## திருவருகைக் கால மடலில் ஆயரின் எதிர்பார்ப்பு

திருவருகைக்காலத்தையொட்டி யாழ். ஆயர் பேரருட் திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் வெளியிட்ட மடலில் துன்புறும் ஏழை மனிதர்கள் வடிவில் இன்றும் எம்மைத் தேடி வருகின்ற கிறிஸ்து பிறப்பு விழாவை பொருளுள்ள விதத்தில் நாம் கொண்டாட நாம் கடந்து வந்த இரக்கத்தின் ஆண்டின் கனிகளை, துன்புறும் ஏழை மக்கள் அறுவடை செய்யத்தக்கதாக எமது பிறரன்புச் செயல்கள் அமையவேண்டும் என்று தெரிவித்துள்ளார். நிறைவுற்ற இரக்கத்தின் ஆண்டு, எதிர்வரும் யோசப்வாஸ் ஆண்டு, நடந்து முடிந்த மேய்ப்ப்ப்பணி மாநாடு, மற்றும் குடும்பங்களை மேம்படுத்தல் ஆகிய விடயங்கள் பற்றி ஆயர் அவர்கள் இம்மடலில் இறைமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்

### நிறைவுறும் இரக்கத்தின் ஆண்டு

உன்னதமான இரக்கத்தின் யூபிலி ஆண்டு நிறைவுறுகின்றது. ஆனால் இறைவனின் இரக்கத்திற்கு முடிவு இல்லை. அதுபோல இரக்கம் மிகுந்தவர்களாக நாம் வாழ வேண்டும் என்ற அழைப்பிற்கும் முடிவில்லை. "இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் இரக்கம் பெறுவர்" (மத்:5:7) என்கின்ற இயேசுக்கிறிஸ்துவின் மலைப்பொழிவிற்கு உரிய விதத்தில் எமது இரக்கம் பொங்கும் வாழ்வால் தொடர்ந்து இறைவனின் இரக்கத்தை நாம் சுவைப்பதோடு எம் வழியாக அந்த இரக்கம் சக மனிதர்களுக்கு பாய்ந்தோட வழி அமைப்போம். இரக்கத்தின் விசேட யூபிலி ஆண்டை பிரகடனம் செய்து தனது இரக்கம் மிகுந்த சொற்களாலும், செயல்களாலும் உலக மாந்தர் அனைவருக்கும் ஒரு உந்து சக்தியாக திகழும் திருத்தந்தை பிரான்சிஸ்சுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவரது குருத்துவ, மற்றும் ஆயத்துவ வாழ்வானது, இறைவனின் இரக்கத்தினால் உந்தித்தள்ளப்பட்டிருப்பதன் பின்னனியில் அவர் இவ்வாறு கூறுகின்றார்.

"காயப்பட்டவர்கள் தமது கதவைத் தட்டும் வரை திருச்சபை காத்திருப்பதில்லை. மாறாக திருச்சபைத்தாய் அவர்களை தெருக்களில் தேடிச்சென்று சந்திக்கின்றாள், அரவணைக்கின்றாள், சேர்த்துக்கொள்கின்றாள்." அதனால் தான் திருச்சபை ஒரு நடமாடும் வைத்தியசாலையாக துலங்க வேண்டும் என அவர் அழைப்பு விடுக்கின்றார். இந்த யூபிலி ஆண்டில் இறைவனின் அணை கடந்த இரக்கம் ஆயிரக்கணக்கான விசுவாசிகளை அணுகிச்செல்ல முடிந்திருப்பதையிட்டு நாம் இறைவனுக்கு நன்றி சொல்லுவோம். இரக்கத்தின் யூபிலிக் கதவுகளோடு சேர்ந்து எமது இதயத்தின் இரக்கக் கதவுகளை அடைத்து விடாமல் எமது வானகத் தந்தை என்றும் இரக்கமுள்ளவராக இருப்பது போல நாமும் தொடர்ந்து இரக்கத்தின் சுனைகளாக திகழ்வோம்.

### தூய யோசவாஸ் ஆண்டு

இலங்கை ஆயர் பேரவை 2017 ம் ஆண்டை தூய யோசவாஸ் ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் மறையும் நிலையில் இருந்த இலங்கைக் கத்தோலிக்க திருச்பைக்கு புத்துயிர் கொடுத்தவர் தூய யோசவாஸ் ஆவார். இவர் கடந்த 14.01.2015 இன்று திருச்சபையில் ஒரு புனிதராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அறிவிக்கப்பட்டது இலங்கைத் திருச்சபைக்கு ஒரு மகிழ்வின் செய்தி. இவர் எமது விசுவாசத்தின் காவலராகவும், விண்ணக பரிந்துரையாளராகவும், துலங்குவதோடு, எமக்கெல்லாம் சவால் நிறைந்த முன்மாதிரிகையாகவும் திகழ்கின்றார். அவரிடம் காணப்பட்ட ஆழமான இறை நம்பிக்கை, நற்செய்தி அறிவிப்பு ஆர்வம், மக்களோடும், பண்பாட்டோடும் ஒட்டிய எளிமை மிகுந்த சாட்சிய வாழ்வு என்பவை நாம் ஆவலோடு விரும்பித் தேட வேண்டிய விழுமியங்களாக காணப்படுகின்றன.

தூய யோசவாஸ் அவர்களை புனிதராக பிரகடனப் படுத்திய திருச்சடங்கிலே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலங்கை வாழ் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் தூய யோசவாசின் முன்மாதிரிகைகளை பின்பற்றி கிறிஸ்தவ விசுவாசத்தில் ஆழமாக ஊன்றியவர்களாக எமது நாட்டின் நீடித்த அமைதிக்கும், நீதிக்கும், ஒப்புரவிற்கும் பங்களிக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார். தமிழ், சிங்கள மக்கள் மத்தியிலே எவ்வித வேறுபாடும் இன்றி கிறிஸ்துவின் விழுமியங்களை விதைத்த தூயரைப் பின்பற்றி நாமும் ஒன்றிப்பின் கருவிகளாக திகழ வேண்டும்.

எதிவரும் புதிய ஆண்டு தூய யோசவாசின் வாழ்வு, பணி பற்றிய ஆழமான தேடல்களையும், சிந்தனைகளையும், செயல்களையும் வெளிப்படுத்துவதாக அமைய வேண்டுமென கோரிநிற்கின்றோம். எமது மறைமாவட்ட ஆணைக்குழுக்கழும், பங்குகளும் தமது அடுத்த ஆண்டிற்கான செயற்றிட்டத்தில் இவ்விடயத்தில் முக்கிய இடம் கொடுக்குமாறு வேண்டுகின்றோம்.

### குடும்பங்களை மேம்படுத்துவோம்

திருதந்தை பிரான்சிஸ் அவர்கள் "அன்பின் மகிழ்ச்சி" என்கின்ற குடும்ப வாழ்வு பற்றிய சிறப்பான சுற்றுமடல் ஒன்றை நமக்குத் தந்துள்ளார். மனித சமுதாயத்தினதும் திருச்சபையினதும் அடிப்படை அலகாக இருக்கின்ற குடும்பங்களின் உயர்ச்சியே சமூகத்தினதும் திருச்சபையினதும் உயர்ச்சியாகும்.

எக்காலத்திலும் இல்லாத அளவிற்கு இன்று குடும்ப வாழ்வு மிகுந்த நெருக்கடிகளைச் சந்திக்கின்றது. தொடர்பூடகங்களின் வளர்ச்சி, உலகியல் போக்குஇ தனிநபர் வாதம் போன்ற பல்வேறு காரணங்களால் அன்பைப் பகிர்ந்து மகிழ்ச்சியடைய வேண்டிய குடும்பங்கள் சீர்குலைந்து சிதறிப் போகின்றன. ஆகவே குடும்பங்களைப் பாதுகாப்பது ஒரு முக்கிய கிறிஸ்தவக் கடமை என்பதை உணர்ந்து இறைமக்கள் அனைவரும் செயற்பட வேண்டுகின்றோம். ஏற்கனவே அன்பின் மகிழ்ச்சி எனும் திருமடலின் தமிழ் மொழி பெயர்ப்பு பங்குகள் தோறும் வளங்கப்பட்டுள்ளது. பங்குகளில் குழுக்கள் அமைத்து இம்மடலின் முக்கிய பகுதிகளையாவது வாசித்து, கலந்துரையாடி, குடும்ப வாழ்வை மேம்படுத்தும் செயற்திட்டங்களை முன்மொழியப் பணிக்கின்றோம்.

குறிப்பாக குடும்பத்தில் உண்மையான அன்பின் மகிழ்வை அனுபவிக்கும் முகமாக **திருக்குடும்ப விழாவை** ஒரு சிறப்பான குடும்ப விழாவாக அனுசரிக்கும் படி வேண்டுகின்றோம். ஆலயங்களில் ஞாயிறு வழிபாட்டை குடும்பங்களுக்காக செபித்துஇ அவற்றிற்கு ஆசீா அளிக்கும் சிறப்பு வழிபாடாக அனுசரிக்கும் படியும் அன்றைய தினம் மாலைப்பொழுதில் குடும்பங்களாகக் கூடி செபித்து ஒன்றாக உணவருந்தி மகிழ்ந்து குடும்பத்தின் அன்பைக் கொண்டாடும் படியும் அழைப்பு விடுக்கின்றோம். பங்குத் தந்தையர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுக்குமாறு பணிக்கின்றோம். மேலும் வருகின்ற ஆண்டில் குடும்ப வாழ்வை மேம்படுத்தும் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த முயல்வோமாக.

### மேய்ப்புப் பணி மாநாடு

எமது மறை மாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்று நிறைவேறியுள்ளது. ஆயினும் அதன் தீா்மானங்கள் வரும் காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். மாநாட்டுத் தீா்மானங்களை பங்குகளிலும் ஆணைக்குழுக் கூட்டங்களிலும் வாசித்து ஆய்வு செய்து அவரவருக்கு உரிய பொறுப்புக்களை திறம்படச் செய்ய அனைவரும் முன்வர வேண்டும். முன்னுரிமைப் பணிகளாக தெரிவு செய்யப்பட்ட விடயங்களில் கூடிய

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# பாதுகாவலன்

## கிறிஸ்மஸ் சிறப்பிதழ்




# அமைதியின், நல்லிணக்கத்தின், ஒப்புரவின் தூதுவர்களாக எம்மை நாம் அர்ப்பணிப்போமாக.

### இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் கிறிஸ்மஸ் செய்தி - 2016

பெத்லகேமில் இயேசுவின் பிறப்பினூடாக, மனித வரலாற்றில் இறைவன் பிரசன்னமாகிய நிகழ்வே கிறிஸ்மஸ் கொண்டாட்டமாகும். இறைவனின் இந்த மனித அவதார மறைநிகழ்ச்சி, அவர் மனுக்குலத்தின்மீது கொண்ட ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்தி நிற்கிறது. "தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவனும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:15).

இயேசு எம் மத்தியில் பிரசன்னமாகி தான் மட்டுமே தரக்கூடிய நிறைவாழ்வில் எம்மையும் பங்காளிகளாக்கினார் என்பதை தெளிவுபடுத்துகின்றார் (யோவான் 10:10). இவ்வுலகில் நாம் எமது வாழ்வை நிறைவான அர்த்தமுள்ள வாழ்வாக வாழ்ந்து அதன்வழியாக நித்தியத்திற்கும் இறைவாழ்வின் பங்காளிகளாக வேண்டுமென அவர் விரும்புகின்றார். இயேசு தனது மனித அவதார மறைநிகழ்ச்சிக் கொண்டாட்டத்தினூடாக, தான் அளிக்கும் நிறைவாழ்வை அனுபவிக்குமாறு எல்லாருக்கும் அழைப்பு விடுக்கின்றார். எனவே, கிறிஸ்மஸ் கொண்டாட்டம்என்பது வெறுமனே ஒரு நடந்துமுடிந்த நிகழ்வை நினைவுபடுத்தும் ஒன்றாக அமைந்துவிடக்கூடாது. மாறாக, எமது வாழ்வின் உண்மையான பெறுமதியை ஆழமாக உணர்ந்து, அதன் முழுமையை நாம்வாழும் சமுதாயத்தில் சான்றுபகரும் நிகழ்வாகும்.

ஆகவே, இயேசுவை எமது வாழ்விலும், எமது குடும்பங்களிலும், எமது சமுதாயத்திலும்

(14ம் பக்.பார்....

## வத்திக்கானில் உருவாக்கப்பட்டுள்ள கிறிஸ்து பிறப்பு காட்சியமைப்பும், கிறிஸ்மஸ் மரமும்

வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ள கிறிஸ்து பிறப்பு காட்சியமைப்பும், கிறிஸ்மஸ் மரமும், கடந்த 9ம் திகதி விளக்கேற்றி திறந்துவைக்கப்பட்டுள்ளன.

25 மீட்டர் உயரம் கொண்டு, 90 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள கிறிஸ்மஸ் மரம்; இத்தாலியின் திரிதெந்து பகுதியின், Lagorai காடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது.

இத்தாலியில், புற்றுநோய் உட்பட பல நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர், சிறுமியர் உருவாக்கியுள்ள பல்வேறு வடிவங்கள், இந்த கிறிஸ்மஸ் மரத்தை அலங்கரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

நோயுற்ற குழந்தைகளை படைப்பாற்றல் மிக்கச் செயல்களில் ஈடுபடுத்தும் மருத்துவ முறையை அறிமுகப்படுத்தியுள்ள

(14ம் பக்.பார்....

## மதத்தின் பெயரால் போர், வன்முறைகள் வேண்டாம்

இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் கனிகள், மத சார்பற்ற நிலை, ஐரோப்பாவில் இளையோர் சந்திக்கும் சவால்கள் ஆகிய கருத்துக்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஓர் ஐரோப்பிய வார இதழுக்கு அளித்த பேட்டியில் பகிர்ந்துள்ளார்.

பெல்ஜியம் நாட்டின் கத்தோலிக்க வார இதழான Tertioவில் இப்புதன் காலை வெளியான இப்பேட்டியில், மதமும் அரசியலும் கலக்காமல் இருந்தது, பழங்காலத்திலிருந்தே பின்பற்றப்பட்ட நிலைப்பாடு

(14ம் பக்.பார்....

## இலங்கையில் சர்ச்சைக்குரிய மிக உயரமான கிறிஸ்மஸ் மரம்

உலகின் மிக உயரமான கிறிஸ்மஸ் மரத்தை உருவாக்கும் இலங்கையின் முயற்சி, ஏழைகளின் சார்பாக நிறுத்தப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவு என கணக்கிடப்பட்டு துவக்கப்பட்ட இந்த பணி, பாதி நிறைவேறிக்கொண்டிருந்தபோது, இப்பணத்தை வீணடிக்காமல், ஏழை மாணவர்களின் படிப்புக்கும், வறியோருக்கான வீடு கட்டுவதற்கும் செலவழிக்க வேண்டும் என, கொழும்பு கர்தினால் மல்கம் இரஞ்சித் அவர்கள் விண்ணப்

(14ம் பக்.பார்....

## குடும்பங்களை மேம்படுத்த உங்கள் பங்களிப்பு

இலங்கை ஆயர்மன்றம் புதிய ஆண்டினை புனித யோசப் வாஸ் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. எனவே *புனித யோசப் வாஸ் ஆற்றிய குடும்ப மேய்ப்புப்பணி, புனித யோசப் வாஸின் மேய்ப்புப் பணி வெற்றிக்கு குடும்பங்களின பங்களிப்பு* என்ற தலைப்புக்களில் ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு எழுத்தாளர்களை வேண்டி நிற்கின்றோம். மேலும் கணவன் மனைவி உறவு, பெற்றோர் பிள்ளைகள் உறவு, பிள்ளை வளர்ப்பு, குடும்ப ஒற்றுமை போன்றவற்றை மேம்படுத்தக்கூடிய சிந்தனைகளை கட்டுரை, கவிதை, சிறுகதை வடிவங்களில் கீழேதரப்படும்

(14ம் பக்.பார்....

## மனிதர்களைக் கொண்டு உருவாக்கப்படும் கிறிஸ்மஸ் குடில் காட்சிகள்

உரோம் நகரின் வில்லரேஜியா (Villaregia) என்ற பகுதியில், மனிதர்களைக் கொண்டு உருவாக்கப்படும் கிறிஸ்மஸ் குடில் காட்சிகள், பத்தாவது ஆண்டாக இவ்வாண்டும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 18ம் தேதி முதல், சனவரி 6ம் தேதி முடிய நடித்து காட்டப்படும் இந்தக் காட்சிகளில் 150க்கும் அதிகமான நடிகர்கள் பங்கேற்கின்றனர்என்றும், இயேசு பிறந்த காலத்தில், யூதேயா நாடு எவ்விதம் இருந்ததென்பது, இக்காட்சிகளில் உருவாக்கப்படும் என்றும் வில்லரேஜியா ஊராட்சி கூறியுள்ளது.

உலகெங்கும் சிறு சிறு துண்டுகளாக நிகழும் போர்களைக் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளதை மையப்படுத்தி,

(14ம் பக்.பார்....

## இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையைப் பாராட்டுகிறார் ஜனாதிபதி

இலங்கையின் ஏழைகள் மற்றும் பின்தங்கியோரின் நிலைகளை சமூக அளவில் முன்னேற்ற, கத்தோலிக்கத் திருஅவை எடுத்துவரும் நடவடிக்கைகளுக்காக அவர்களை பாராட்டுவதாக தெரிவித்தார், இலங்கை அரசுத் தலைவர், மைத்ரிபாலா சிறிசேனா.

கத்தோலிக்கர்களை மட்டுமல்ல, இலங்கை மக்கள் அனைவரையும் வழிநடத்துவதற்கு கல்வியறிவுமிக்க, பெரும் கத்தோலிக்கத் தலைவர்கள் கிடைத்தது, இலங்கை நாட்டிற்கு கிடைத்த பெரிய ஆசீர் என, தன்னை சந்தித்த ஆசிய ஆயர் பேரவைக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் கூறினார், அரசுத் தலைவர் சிறிசேனா.

இலங்கையில் கடந்த வாரத்தில் இடம்பெற்ற ஆசிய ஆயர் பேரவையின் 11வது நிறையமர்வுக் கூட்டத்தை முன்னிட்டு, இலங்கை வந்திருந்த, 40 நாடுகளின் 140க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளின் சார்பாக FABC எனும் ஆசிய ஆயர் பேரவைக் கூட்டமைப்பின் தலைவர், கர்தினால் ஆஸ்வால்டு கிரேசியஸ், இலங்கை கர்தினால்

(14ம் பக்.பார்....

## குருக்களாக வருபவர்கள் முழு மனிதர்களாக இருக்கவேண்டும்

குருக்கள் சமுதாயப் பணியாற்றும் செயல்வீரர்கள் அல்ல, மாறாக, இறைமக்களுக்கென, கடவுளால் அருள்பொழிவு செய்யப்பட்டவர்கள் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ள கருத்தை, வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர், வத்திக்கான் நாளிதழுக்கு வழங்கிய ஒரு பேட்டியில் நினைவு கூர்ந்துள்ளார்.

குருக்களை உருவாக்குதல் குறித்து, புதிய வழிமுறைகளை உள்ளடக்கிய ஓர் ஏடு, டிசம்பர் 7 புதனன்று வெளியானதையொட்டி, அருள்பணியாளர்கள் பேராயத்தின் தலைவர், கர்தினால் Beniamino Stella அவர்கள், வத்திக்கான் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில், இவ்வேட்டினைக் குறித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

(14ம் பக்.பார்....

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

அருட்பணி
S.V.B.மங்களராஜா

முன்னைய தொடர்ச்சி.....

# கோவாப் பிரிவினை (Goan Schism)

1850ல் ஊர்காவற்றுறையில் பங்குத்தந்தை லவுறென்ற் யே.ச. (Laurent, S.J.) அடிகளுக்கும் பங்கு மக்களில் ஒரு சாராருக்குமிடையில் சில பிரச்சினைகளேற்பட்டன. அவர்களுட் சிலர் பணி நீக்கம் செய்யப்பட்ட பிரான்செஸ்கோ ஜியோவான்னி அடிகளைத் தமது பங்கிற்கு வந்து தங்குமாறு அழைப்புவிடுத்தனர். அவரும் ஒரு பெரிய கிறீஸ்தவ சமூகம் அங்கிருப்பதாக எண்ணி 1851ம் ஆண்டு ஊர்காவற்றுறையை வந்தடைந்தார். ஆயினும் அவருக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கவில்லை. லவுறென்ற் அடிகளும் அறைவீட்டை விட்டகலவுமில்லை. 90 பேர் மட்டும் அடங்கிய ஒரு கூட்டம் புனித செபஸ்ரியார் கோவிலடியில் ஜியோவான்னி அடிகள் தங்குவதற்காக ஒரு கொட்டில் வீடமைத்துக் கொடுத்தனர். இவர் அங்கிருந்த வண்ணம் பல்வேறு ஆலயங்களின் மூப்பர்களின் ஆதரவைப் பெற முயன்றார். அதே வேளையில் லவுறென்ற் அடிகள் பிரிவினை வாதக்குருவாகிய பிரான்செஸ்கோ ஜியோவான்னி அடிகள் ஆயர் பெற்றக் கீனியால் நியமிக்கப்பட்ட குருவின் அனுமதியின்றி ஊர்காவற்றுறையில் எந்தக் கத்தோலிக்க பங்குத்தளத்திற்குள்ளும் செல்லக்கூடாதென்ற தடையுத்தரவைப் பெற்றுக் கொண்டார்.

ஊர்காவற்துறையில் பிரான்செஸ்கோ ஜியோவான்னி அடிகளின் பிரிவினைச் செயற்பாடுகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் வேறு இடங்களில் ஆயர் பெற்றக்கினீயின் நிர்வாகத்தில் இயங்கிய ஐரோப்பிய குருக்களுடன் அவர்கள் இந்த பங்குகளில் பிரச்சினைப்பட்ட சிலர் மத்தியில் பிரான்செஸ்கோ ஜியோவான்னி பிரபலமடையத் துவங்கினார். இவ்வாறாக 1851ல் பாஷையூரில் சில கத்தோலிக்கர் இப்பிரிவினைக் குருவைப் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் கொண்டு வந்து அமர்த்த முயன்றனர். இச்சதிமுயற்சிக்கு ஆலய மூப்பரும் உடந்தையாக இருந்தார். பாஷையூரில் பொதுவாகப்பங்கு மக்களுக்கும் ஐரோப்பியக் குருக்களுக்கும் நல்லுறவு நிலவி வந்தமையால் எவ்வாறு இச்சதி கருக்கொண்டது என்பது ஒரு புதிராகவேயிருந்தது. இச்சதி பற்றிய செய்தி பங்குத்தந்தையாகிய லெபெஸ்கோ (Le Bescou) அ.ம.தி. அடிகளுக்கு, கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை திருநாள், நவநாள் நடத்திக் கொண்டிருந்த போது எட்டியது. இவர் உடனடியாகப் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு விரைந்து அறை வீட்டில் இருந்தமையால் பிரான்செஸ்கோ ஜியோவான்னி அடிகளின் ஆதரவாளர்கள் வந்து ஆக்கிரமிப்பதைத் தடுக்கக் கூடியதாயிருந்தது.

ஆயினும் 1852ம் ஆண்டு யாழ்நகரின் மத்தியிலுள்ள அடைக்கல மாதா ஆலயத்தை ஒரு குறுகிய காலம் ஆக்கிரமித்துத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க பிரான்சிஸ்கோ ஜியோவான்னி அடிகளால் முடிந்தது. இந்நிலை ஏற்படுவதற்கு 1848ம் ஆண்டிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக இடம் பெற்ற துர்ப்பாக்கிய நிகழ்வுகளும் குறிப்பாக ஆயர் பெற்றக் கீனியின் அவசரப்பட்ட முடிவுகளும் காரணமாக இருந்துள்ளன எனலாம்.

1848ம் ஆண்டு இறுதிப்பகுதியில் யாழ்ப்பாண மறைத்தளத்தை மூன்று பங்குகளாகப்பிரிக்கும் நோக்கத்துடன் ஆயர் பெற்றக்கீனி தமது வதிவிடத்தை யாழ் அடைக்கல மாதா ஆலயத்திற்கு மாற்றினார். அவ்வருடம் கிறிஸ்மஸ் காலத்தில் அடைக்கல மாதா ஆலயத்தில் ஒரு பாலன் கூட்டை அமைப்பதற்கு ஆயர் பெற்றக்கீனி அனுமதி வழங்கினார். இந்த அனுமதியை வழங்கியமை உண்மையில் இதுவரையில் கிறிஸ்மஸ் திருவிழாவை ஆயரின் தலைமையில் புனித மரியாள் பேராலயத்தில் கொண்டாடிவந்த உரிமையை அவ்வருடம் யாழ் அடைக்கல மாதா ஆலயத்தில் கொண்டாடுவதற்கு வழங்கியமையின் அடையாளமாகக்கருதப்பட்டது. ஆயர் பெற்றக்கீனி எடுத்த இவ்வவசரமுடிவு பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது. யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் தமது பாரம்பரியங்களையும் தாம் வழமையாக அனுபவித்து வந்த சில சலுகைகளையும் இலகுவில் விட்டுக்கொடுக்கக் கூடியவர்கள் அல்ல என்ற உண்மையை ஆயர் பெற்றக்கீனி சரியாகப்புரிந்து கொள்ளவில்லை.

செமேரியா அடிகளுக்கு பேராலயப் பங்கு மக்களின் நியாயத்தன்மை விளங்கியது. எனினும் ஒரு 'புரட்சி' வெடிக்கலாம் என்ற அச்சத்தில் ஆயர் பெற்றக்கீனியிடம் பேராலயப்பங்கு மக்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பு நிலை உருவாகிவருவதைச்சுட்டிக்காட்டினார். ஆயர் பெற்றக்கீனி தான் எடுத்த தீர்மானத்திலிருந்து எவ்வாறு பின்வாங்குவது? தீர்மானம் எடுத்தது எடுத்ததுதான் அவர்கள் 'புரட்சியில்' ஈடுபட்டால் அவர்களே அதற்குரிய விலையைக் கொடுக்கவேண்டிவரும் என்றுவிட்டார். இரண்டு பக்கங்களும் தமது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வராதிருந்தால் நிலைமை மோசமடையுமென்பதையுணர்ந்த செமேரியா அடிகள் ஆயரவர்கள் கிறிஸ்மஸ் நள்ளிரவுத்திருப்பலியைப் பேராலத்திலும் காலைத் திருப்பலிகளை அடைக்கல மாதா ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்கலாம் என்ற யோசனையை முன்வைத்தார். ஆயர் பெற்றக்கீனி இதற்கு உடன்பட்டாலும் ஆயரவர்கள் காலைத்திருப்பலிகளை வேறு எங்கும் சென்று ஒப்புக்கொடுக்காதபடி வலுக்கட்டாயமாகத்தடுக்கப்படலாம் என்ற ஒரு வதந்தி பரவியது. கிறிஸ்மஸ் தினத்திற்கு இரண்டு நாட்களுக்குமுன் பேராலய அறைவீட்டுக்கருகில் பெரும் கூச்சலும் குழப்பமுமாகவிருந்தது. தாங்கள் இதுவரை அனுபவித்துவந்த உரிமைகள் தற்போது மறுக்கப்பட்டுள்ளதாகவும் தங்களுக்கு இனிமேல் ஐரோப்பிய மறைப்பணியாளரும் ஆயரும் தேவையில்லையென்றும் சத்தமிட்டனர். இக்குழப்பநிலை அடுத்தநாளும் தொடர்ந்தது. அத்துடன் கூட்டத்தினர் கோவா பிரிவினைக்குரு ஒருவரைக் கொண்டு வரப்போவதாயும் சூளுரைத்தனர். கிறிஸ்மஸ் தினத்தன்று இரவில் அடைக்கல மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு இருந்த வேளையில் மரியாள் பேராலயத்தில் மக்கள் கட்டுப்படுத்த முடியாதளவிற்குச் சத்தமிட்டுக் கொண்டிருந்தனர். சிலர் செபங்களை வாசித்துக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் சென்று ஆலய மணிகளை இடைவிடாது அடிக்கத் தொடங்கி அதுதான் ஆயருக்கான சாவுமணியென்றும் சத்தமிட்டனர். காலையில் ஆயர் பெற்றக்கீனி கேட்டுக் கொண்டதற்கிணங்க பக்தியுள்ள மென்மைப்போக்குடைய மாகாராணியின் சட்டத்தரணியாகிய ஐரிஷ் நாட்டவரான றொபேர்ட் லாங்ஸ்லோ (Robert Langslow) என்பவர் வந்து பேராலயக் கதவுகளைப் பூட்ட முனைந்தார். அவர் அங்கு கூடியிருந்த மக்களால் வலுக்கட்டாயமாக ஆலயத்திற்கு வெளியே தள்ளிவிடப்பட்டதுமல்ல, கற்களால் தாக்கப்பட்டு கடும் காயமுமடைந்தார். உடனடியாக செமேரியா அடிகள் தலையிட்டு வன்முறையை முடிவுக்கு கொணர்ந்தது மட்டுமல்ல தவறான பாதையில் சென்றுகொண்டிருந்த இக்கத்தோலிக்கரைத் தமது தவறுகளின் கனாகனத்தை உணரப் பண்ணினார். அவர்களும் தமது தவறுகளுக்காக ஆயர் பெற்றக்கீனியிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டனர். ஒப்புரவின் அடையாளமாக 1849ம் ஆண்டு புதுவருடத் தினத்தன்று யாழ் பேராலயத்தில் ஓர் அர்த்தமுள்ள திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

1848ம் ஆண்டு இடம்பெற்ற விரும்பத்தகாத நிகழ்வுகள் திரும்பவும் இடம் பெறாதிருக்க ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 1849ம் ஆண்டு யாழ் நகரில் எந்த ஆலயத்திலும் பாலன்கூடு அமைப்பதை ஆயர் பெற்றக்கீனி தடை செய்தார். அந்த வேளையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாண மறைத்தளத்தின் பல்வேறு ஆலயங்களைச் சேர்ந்த அரச அலுவலர்கள் கையொப்பமிட்ட ஒரு மனு ஆயர் பெற்றக்கீனிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் கிறிஸ்மஸ், ஈஸ்டர் திருநாட்களில் தாம் பாரம்பரியமாகக் கொண்டாடி வந்த முறைகளைக் குழப்பவோ, மாற்றவோ வேண்டாமெனக் கேட்டிருந்தது. அத்துடன் இத்திருநாட்களை புனித மரியாள் பேராலயத்தில் கொண்டாடிவந்த பாரம்பரியத்தை தொடருமாறும் கையெழுத்து வைத்தவர்கள் கேட்டிருந்தனர். முதல் வருடம் இடம்பெற்ற நிகழ்வுகளுக்காக ஆயர் பெற்றக்கீனி மீது கோபம் கொண்டிருந்த ஒருசாரார் இன்னும் ஒரு கோவா பிரிவினைக் குருவை எப்படியாவது பேராலயத்திற்கு கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில் இருந்தனர். ஆனால் தாம் அவ்வாறு செய்ய முற்பட்டால் திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்டு விடுவோம் என்ற பயமும் அவர்களுக்கு இருந்தது. ஆயினும் பிரிவினைக்குருவாகிய மிகுவேல் மஸ்கரேனஸ் அடிகள் கத்தோலிக்க ஆயர் பெற்றக்கீனியால் திருச்சபைக்கு புறம்பாக்கப்பட்டாலும் பரவாயில்லை தான் வந்து அவர்களுக்கு திருவருட் சாதனங்களை நிறைவேற்றலாம் என்ற எண்ணத்திலிருந்தார். ஆயர் பெற்றக்கீனி தாம் முதலில் எடுத்த முடிவில் இருந்து பின்வாங்கியவராக, பாலன்கூட்டை பேராலயத்தில் அமைத்து வைக்க உத்தரவு வழங்கியதுடன் அங்கு கிறிஸ்மஸ் நள்ளிரவுத்திருப்பலியையும் ஒப்புக்கொடுக்க உடன்பட்டார்.

அடுத்த வருடம் அடைக்கலமாதா ஆலயப்பங்கு மக்கள் தமது ஆலயத்தில் கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்க உத்தரவு கேட்டனர். ஆயர் பெற்றக்கீனி இனிமேல் இதுபோன்ற சிக்கல்களில் கவனம் செலுத்த விரும்பாதவராக செமேரியா அடிகளிடம் அவற்றை விட்டுவிட்டார். பேராலய பங்கு மக்கள் பிரச்சினையை கிளப்புவார்கள் என்ற அச்சத்தில் செமேரியா அடிகள் அடைக்கலமாதா ஆலய மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. இம்முடிவு பேராலய பங்கு மக்களுக்கு மகிழ்ச்சி அளித்தாலும் அடைக்கல மாதா பங்குமக்கள் இதனால் கோபமுற்றமை புரிந்து கொள்ளக்கூடியதாயிருந்ததுடன் இது இரண்டு ஆலயமக்களுக்கும் ஒருமானப்பிரச்சினையாகி விட்டது. அடுத்த இரண்டு வருடங்கள் இப்பிரச்சினை ஒரு தொடர் பிரச்சினையாகவே இருந்தது.

(தொடரும்....)

# உறவிலே மலர்வோம்



துல்லிய பட்டு போன்ற
தூயவர் மரியாள் கையில்
மெல்லிய பாலன் இயேசு
விளக்கெனப் புன்னகைத்தான்
நல்லவர் உள்ளம் போல
நலம்பெறப் பிறந்த செல்வன்
இல்லை என்னாதவாறு
இருகரம் விரித்து நின்றான்

கலாபூஷணம் புலவர்
அரியநாயகம்

*"துல்லிய பட்டு போன்ற*
*தூயவர் மரியாள் கையில்*
*மெல்லிய பாலன் இயேசு*
*விளக்கெனப் புன்னகைத்தான்*
*நல்வவர் உள்ளம் போல*
*நலம்பெறப் பிறந்த செல்வன்*
*இல்லை என்னாதவாறு*
*இருகரம் விரித்து நின்றான்"*
(இயேசு காவியம்)

இயேசுவின் பிறப்பை புனித பவுலடியார் கலாத்தியருக்கு எழுதிய திருமுகம் 4இல் 4வது வசனத்தில் "காலம் நிறைவேறிய போது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம்பிள்ளைகள் ஆக்கு மாறு கடவுள் தம் மக்களை பெண்ணிடம் பிறந்தவராக வும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்.

புனித பாப்பரசர் 2ம் ஜோண்பவுல் கூறியது போல் "பெண்மைத் தன்மையோடு காலாகாலத்திற்கும் நினைக்கும் வண்ணம் சரியான காலத்தில் அந்தபெண் செய்து முடித்தாள். விண்ணக மாந்தரின் பிரதிநிதியாக ஓர் ஆணும், மண்ணகத்தின் சார்பாக ஒரு பெண்ணும் புதிய ஆதாமாக, புதிய ஏவாளாக, உருவெடுத்து பழைய ஆதாம் - ஏவாளின் கட்டுக்களை அறுத் தெறிந்தார்கள்".

"அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெருமகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" (லூக். 2:10,11) என்ற நற்செய்தியை அறிவித்த தூதருடன் சேர்ந்து "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக். 2:13,14) என்று கடவுளைப் புகழ்வோம்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் உண்மையான பொருள் இயேசுவை வழிபடுவதுதான். கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேம் வந்து ஏரோது அரசனிடம் யூதர்களின் அரசரை வழிபட வந்திருக்கின்றோம் என்றனர். கொடியவனான ஏரோதும் "நீங்கள் சென்று குழந்தையைக் குறித்துத் திட்டவட்டமாய் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று அக்குழந்தையை வழிபடுவேன்" (மத் 2:8) என்று ஞானிகளுடன் வஞ்சமாகக் கூறினாலும் உண்மையான கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை அவன் வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன.

இக்காலத்தில் மக்கள் விழாக்களைப் பெரிதும் விரும்பி ஆடம்பரமாகக் கொண்டாடுகிறார்கள் அன்றி அதன் உள்ளார்ந்த அர்த்தத்தைக் காண ஆர்வம் காட்டுவதில்லை.

எங்கும் வண்ண விளக்குகள், கிறிஸ்மஸ் தாத்தாக்கள் வாழ்த்துச் செய்திகள், தொலைக் காட்சிகளில் கண்ணைக்கவரும் விளம்பரங்கள், அழகிய வாழ்த்து அட்டைகள், குடில்கள், கேக்கும், கிறிஸ்மஸ் மரமும் பலகாரங்களும் புத்தாடைகளுமே; இவைகளையே இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டாடி மகிழ்கின்றோம். ஆனால் இக்கொண்டாட்டத்தின் உண்மையான கருத்து இங்கேயே மறைந்துவிடுகிறது. அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் என்றால் என்ன? கவிஞர் ஒருவரின் கவிதை வரிகள்.

*"குளிர்விட்டுப் போன மனிதர் நடுவில்*
*குளிரில் நடுங்கி நீ பிறந்தாய்*
*அன்று உனக்காகக் காத்திருந்தது*
*பக்தகோடிகள் அல்ல*
*ஊர்க்காடியும் ஓலை குடிசையும் தான்*
*அன்று நீயா ரென்று தெரியாததால்*
*உன் பிறந்த நாளை உலகம்*
*கொண்டாடவில்லை*
*இன்றோ, அதைக் கொண்டாடும் அவசரத்தில்*
*உன்னை நினைப்பதற்கே நேரமில்லை"*

இந்தக் கருத்துத்தான் இன்றைய மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது.

அன்னை மரியின் "ஆம்" என்ற பணிவின் வெளிப் பாட்டில் ஓர் இனிய உயிரின் ஜனனம். இறைத் தந்தையின் ஒப்பற்ற அன்பின் வெளிப்பாட்டில் உறவுக்கு உயிர் கொடுக்கும் மக்களின் அன்பின் ஜனனம் இயேசு. இருளகற்றும் பகலவனாக இறை இயேசுவின் பிறப்பு. சூரியன் உதித்தாலும் கண்பார்வை அற்றுப்போயின் விடியல் தெரியுமோ? மகிழ்ச்சியை விற்றுவிட்டு மாய விடிவுபெறப் போராடிக்கொண்டிருக்கும் அவலநிலை விடுத்து மகிழ்ச்சியையும் நிறைவையும் மையமாக்கி வாழ்ந்திடுவோம் மறு இயேசுவாக.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருப்பதை இல்லாத ஏழை எளியவர்களிடம் பகிர்ந்து கொடுக்கும்போது மழலை இயேசுவின் சிரிப்பொலியும் புன்னகையும் அவர்களிடம் வெளிப்படும். பகிர்ந்துகொள்ள மனமில்லாதவர்கள் இரண்டு முட்களும் இல்லாத கடிகாரம் போன்றவர்கள். அது நின்றாலும் ஓடினாலும் உபயோகமில்லை.

பிறருக்கு எதைக் கொடுக்கின்றோமோ அதிலிருந்து தான் உண்மையான மகிழ்ச்சி பிறக்கும். நம் உள்ளத்திலும் இல்லத்திலும் இயேசு பிறப்பார்.

# விடியல்



றி. அன்ரனி அசிசி
(புனித மடுத்தினார் குருமடம்)

மார்கழி குளிரினிலே ஏழைக்குடிசையினிலே அழுகுரல் ஒன்று கேட்கின்றது "அம்மா அம்மா" என இரு விழிகளும் கண்ணீரால் நிரம்ப அழைக்கின்றாள் வசந்தி. சமையல் அறையினுள் இருந்து "என்னபுள்ள ஏன் அழுகிறாய்" என வினாவினாள் வசந்தியின் தாய் வாணி. "இல்லையம்மா என்ர நண்பர்கள் எல்லாம் கிறிஸ்மஸ்"க்கு புது உடுப்பு வாங்கிறாங்க எனக்கும் ஒரு புதுஉடுப்பு வாங்கிதாங்கவன் அம்மா" என்றாள் வசந்தி. உடனே வாணி என்னபுள்ள செய்கிறது நான் செய்கிற, கூலிவேலைக்கு தாற சம்பளம் ஒருநாள் சாப்பாட்டுக்கே காணாது. பத்தாதத்துக்கு அப்பாவும் இன்னும் தடுப்பில இருந்து வரவில்லை. நல்லாட்சி மலர்ந்து உதிரவும் போகுது. ஆனா இன்னும் அப்பா விடுதலையான பாடு இல்ல. அப்பா ஈழப்போரில பங்கெடுத்த போது எங்கள முன்னபின்ன தெரியாத வங்களும் கையெடுத்து கும்பிட்டாங்க. இப்ப உதவி எண்டு நாங்க கையேந்த எல்லாரும் கையவிரிக்கின்றாங்க. காலம்தான் எல்லாத்துக்கும் பதில் சொல்ல வேணும் என கண்ணீர் வடித்தாள் வாணி. சரி அம்மா அழாதேங்கோ எனக்கு புதுஉடுப்பொண்டும் வேணாம். எல்லாத்துக்கும் யேசுவிட பிறப்போடு வழிபிறக்கும் கவலைப்படாதேங்கோ என தாயை கட்டி அணைத்தாள் வசந்தி. திடீரெண்டு ஒரு பெரிய சத்தம் வெளியில் கேட்டது. உடனே வசந்தி அம்மா அண்ணா எங்கே என்று கேட்டாள். உடனே வாணி கிணற்றை நோக்கி ஓடினாள். அங்கே குமார் பேச்சற்று கிணற்று கட்டில் விழுந்து கிடந்தான். இதை கண்ட வாணி கதிகலங்கி ஓலமிட்டாள். உடனே வசந்தி அம்பிலன்சுக்கு அழைத்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு குமாரை கொண்டு சென்றார்கள். குமார் இறுதியுத்தத்தில் தனது ஒரு காலை இழந்து அங்கவீனமாக்கப்பட்டவனாக காணப்படுகிறான். போர் முடிந்து பல வருடங்கள் கடந்தாலும் அதன் வடுக்கள் இன்றும் பலரால் சுமக்கப்படுகின்றன. குமாருடைய உடல் நிலைதேறியபின் கிறிஸ்து பிறப்பிற்கு முதல் நாள் மூவருமாக ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டிற்கு வந்தார்கள். அக்கம் பக்கம் எல்லாம் ஆர்ப்பரிப்பும், ஆயத்தங்களும், பட்டாசு ஒலிகளும், ஆனால் இங்கே அழுகுரலும் கண்ணீரும் தான். குமாரை கவனிக்க வேண்டும் என்பதால் வாணி இரவு திருப்பலிக்கு செல்லவில்லை. எனவே வசந்தி இரவு திருப்பலிக்கு சென்றுவிட்டு நித்திரைக்கு சென்றுவிட்டாள்.

மறுநாள் அதிகாலை ஒரு குரலொலி வீட்டு வேலியோரமாக கேட்டது. திடுக்கிட்டெழுந்த வாணி உடனே "யார்" என்ற வினாவுடன் கையில் குப்பி விளக்குடன் கால்கள் தடுமாற வேலியை நோக்கி விரைந்தாள். கையில் ஒருசிறு பையுடன் படலையில் யாரோ நிற்பதை பார்த்தாள் வாணி. உடனே அவளால் அடையாளம் காணமுடியவில்லை. இன்னும் அருகில் சென்று உற்றுப்பார்த்தாள். அதுவேறுயாரும் இல்லை வாணியின் கணவர் ராஜா. வாணிக்கு என்ன செய்கிற தெண்டு தெரியாம ஓடிச்சென்று கட்டியணைத்து அழுதாள். வாணியின் அழுகுரல் கேட்டு வசந்தியும் வெளியில் வந்து பார்த்து "அப்பா" என குதுகளித்துக் கொண்டு ஓடினாள். கட்டிலில் கிடந்த குமார் கண்கலங்கி அழுதான். முன்னைய காலங்களில் அப்பா வேலை முடித்துவிட்டு வரும்போது துள்ளிக்குதித்த கால்கள் இன்று உதவாமல் போய் விட்டதே என கவலைப்பட்டான். பின் சந்தோசத்துடனும் உற்சாகத்துடனும் காலைத் திருப்பலிக்கு ஆயத்தம் செய்தார்கள். இவ்வளவு காலம் இல்லாத ஒரு சந்தோசம் அன்றைய தினம் வெளிப்பட்டது. வாணியினுடைய கஸ்ரங்கள், துன்பங்கள், கவலைகள் எல்லாவற்றுக்கும் யேசுக்கிறிஸ்துவின் பிறப்பு ஒரு முற்றுப்புள்ளியாகவும் இருள் நிறைந்த வாழ்வு ஒளி பொருந்திய விடிவெள்ளியாக மாற்றம் கொண்டது.

எதை உண்பது, எதைக் குடிப்பது என நீங்கள் தேடிக் கொண்டிருக்க வேண்டாம்; கவலை கொண்டிருக்கவும் வேண்டாம் ஏனெனில் உலகு சார்ந்த பிற இனத்தவரே இவற்றையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவை தேவையென உங்கள் தந்தைக்கு தெரியும் (லூக் 12:29 - 30).

## விடிவுதரும் கிறிஸ்து பிறப்பு

மானுட வரலாற்றிலே மாபெரும் திருப்புமுனை கிறிஸ்து பிறப்புப் பெருவிழா, ஆதியிலே இஸ்ராயேல் மக்கள் சாவின் விளிம்பில் பயணித்தவேளை அவர்களின் விடிவுக்காய் பிறந்தவர் கிறிஸ்து.

அந்தவகையில் விடிவுக்காய்ப் பிறப்பவர் கிறிஸ்து என்பது பொதுநோக்கு.

இன்றும் விடியலைத்தேடி விடலைத்துடிப்புடன் ஏங்கும் விழிகளில் பிறப்பாரோ?

பல களங்களிலே காவியம் படைத்து இன்று உறவு களையும், உணர்வுகளையும் இழந்து உருக்கு லைந்து வாழும் தமிழர் எம் மத்தியில் விடிவு தர கிறிஸ்து பிறப்பாரோ?

விஞ்ஞான விருட்சத்தின் விட்டத்தில் நின்று விந்தை செய்யும் மானிடர் எம்மத்தியில் விடிவுதர கிறிஸ்து பிறப்பாரோ?

தொழில்நுட்பம் எனக் கூறி, தினம் தினம் தொலைந்து போகும் மந்தைகளை மீட்க எம் ஆயன் பிறப்பாரோ?

மதுவும் மாதுவும் என மரபுகளையும் மறந்து மரணிக் கும் மனிதத்தை மீட்க கிறிஸ்து பிறப்பாரோ?

இவ்வாறு விடைபுரியா புதிர்களோடு, விடியலை நோக்கி ஏங்கும் எங்கள் விழிகளுக்கு விடிவுதரும் கிறிஸ்து பிறப்பாரோ?

*லூ. பஸ்ரியன்,*
*புனித மடுத்தினார் குருமடம்.*

## ஒளிவிழா
### யா / வேம்படி
### மகளிர் உயர்தரப் பாடசாலை

*"தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளாயும் இருந்தார் அனைத்தும் அவரால் உண்டாயின".*

*(யோவான் 1:1-18)*



யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் 15.11.2016 காலை 10.00 மணியளவில் ஒளிவிழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது. மங்கள விளக்கேற்றல் நிகழ்வுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அருட்தந்தை சின்னத்துரை நீல்ஆம்ஸ்ரோங் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார். அடுத்து மெதடிஸ்த திருச்சபை அருட்தந்தை சசிதரன் அவர்கள் இறையாசீர் வேண்டி செபம் செய்தார். அருட்தந்தை சின்னத்துரை நீல்ஆம்ஸ்ரோங் அவர்கள் தமது உரையில் கிறிஸ்து பிறப்புக்காலம் அண்மித்துள்ளதால் நாம் சிறு சிறு பிறர்நலச் செயல்களால் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கமுடியும் என்றும் ஏழைகள் ஒடுக்கப்பட்டோர், அனாதைகள், விதவைகள், சமுதாயத் தால் புறந்தள்ளப்பட்டோர் மத்தியில் கிறிஸ்துவுக்கு சாட்சியாக திகழ வேண்டும் என்றும் கூறினார்.

அடுத்து மாணவர்களால் கரோல் கீதங்கள், வரவேற்பு நடனம், பேச்சு, தரம் 6,7,8,9 கிறிஸ்மஸ் பாடல்களும் கோலாட்டம், Angel Dance மற்றும் நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

அடுத்து எமது பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் அனைவரும் அமைதியாக இருந்து இவ்விழாவை பார்ப்பது மகிழ்ச்சியான விடயம் என்றும் இறைவனது பிரசன்னத்தில்தான் அமைதியை அனுபவிப்பதாகவும் கிறிஸ்தவத்தில்தான் இதை காண்பதாகவும் வேறு எங்கும் இவ் இறை அமைதியை அனுபவிக்க வில்லை என்றும் கூறினார்.

*- சர்ந்தினி சின்னத்துரை -*

# நத்தார் வருகிறது... சிந்தனையில் சில சந்திப்புக்கள்

மார்கழி மாதக் கடைசிவாரம் கிறிஸ்தவர்களுக்கு கொண்டாட்டமான வாரம், கிறிஸ்து பிறப்பை நினைவுபடுத்தி மகிழும் வாரம், கிறிஸ்துவின் பிறப்பை நினைவு படுத்தும் இந்த வாரம் நமக்குதரும் அனுபவங்கள்தான் என்ன? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவம், ஒவ்வொருவரை சந்தித்து அனுபவங்களை கேட்டு பார்ப்போமா?

**சிறுவர்கள் என்ன கூறுகிறார்கள்:** புதிய ஆடை, புதிய உணவு வகை, கேக், பலகாரம், பாலன் கூடு, வெடிச்சத்தம், கிறிஸ்மஸ் தாத்தா, கரோல்கீதம் வாழ்த்து அட்டைகள், பெரியவர்களிடம் இருந்து பரிசுப் பொருட்கள் இப்படியான மகிழ்ச்சி நிறைந்த நினைவுகளை கிறிஸ்மஸ் எனக் கூறுகிறார்கள்.

**பெற்றோர் என்ன கூறுகிறார்கள்:** உறவினர்களோடு அன்பை பகிர்ந்து கொள்ளுதல், உறவை புதுப்பித்தல், பிள்ளைகளிற்கு கடன் வாங்கியாவது புது ஆடைகள் தைத்து கொடுத்தல், நடுச் சாமப்பூசைக்கு செல்லல், விசேட விதமான உணவுகளை சமைத்தல் இவைதான் எங்கள் கிறிஸ்மஸ் என்கிறார்கள்.

**இளைஞர்களை சந்தித்தபோது:** அன்று ஒரு விதமான நாள், நண்பர்களை தேடி நாலு இடத்திற்கு போக அனுமதி கிடைக்கும். சினிமாவிற்கு போக, நண்பர்களிற்கு வாழ்த்து அட்டை அனுப்பத் தேவையான பணம் பெறல், புத்தாடையை சாமப் பூசையில் நண்பர்களிற்கு காட்டலாம் இப்படி கூறுகின்றார்கள்.

**இளம் கன்னியர்களைக் கேட்டபோது:** அலுமாரியில் அடுக்கி வைத்திருக்கும் தைத்த விதம் விதமான ஆடைகளை காலை ஒன்று மாலை ஒன்றாக அணிய சந்தர்ப்பம் கிடைக்கும், நண்பியர்களின் வீடுகளிற்கு விஜயம் செய்ய வாய்ப்பு கிடைக்கும் ஒரு நல்ல நாள் கிறிஸ்மஸ். இது இவர்களின் வெளிப்பாடாகும்.

**துறவிகள், குருக்களை சந்தித்தபோது:** அவர்களில் சிலர் இது மகிழ்ச்சியான ஓர் இரவு நிகழ்வு. விழித்து காத்திருக்கும் எம் மக்களைச் சந்தித்து வரவேற்று வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்ளும் ஒரே ஒரு நாள் கிறிஸ்மஸ் ஆகும்.

**இவைதானா கிறிஸ்மஸ்? :** இந்த விழாவிற்கான முக்கிய காரண கர்த்தாவான யேசுவை சந்தித்த போது அவர் கூறியதாவது. 'இந்த விழாவிற்கு அடிப்படைக் காரணமான எம் பிதாவிடமும் பின்னர் எம்மிடமும், அதன்பின் என் தாயிடமும் என் வளர்புத் தந்தையிடமும் கேட்டு தெரிந்து கொள்' என்றார்.

வேறு வழியில்லாமல் பிதாவிடமும் கேட்டேன் அவர் சொன்னார். (யோவான் 3:16) 'இறைவாக்கை வாசித்து பார் என் ஒரே மகனையே முழு உலகிற்குக் கொடுத்தேன். அதுதான் எனக்கு கிறிஸ்மஸ்'என்றார்.

*பிறகு யேசுவை சந்தித்தேன் :-*

'(பிலிப்பியர் 2:6-16) பகுதியில் எனது விழாவைப் பற்றிய குறிப்பு உள்ளதே, அதாவது என்னையே வெறுமை ஆக்கினேன். அதுதான் எனது கிறிஸ்மஸ்' என்றார். பிறகு தூய ஆவியானவரை நோக்கி மன்றாடினேன் அவர் கபிரியேல் தூதர் மூலமாகக் கூறப்பட்ட செய்தியை நினைவூட்டினார். (லூக்கா 1:35) 'இயல்பு நிலைக்கு மேலாகச் செயற்படுவதே என்னைப் பொறுத்த வரையில் கிறிஸ்மஸ்' என்றார். தாய் மரியாள் மிகவும் ஆவலோடு பதில் கொடுத்தார். 'ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே நிகழட்டும் (லூக்கா 1:38) என்று கூறியதே கிறிஸ்மஸ் ஆகும் என்றாள். வளர்ப்புத் தந்தை சூசை, கனவில் கூறப்பட்டதை நம்பினேன் அது என் அறிவுக்கு எட்டியவரை தெளிவாக இருக்கவில்லைதான், ஆயினும் 'அது கடவுளின் செய்தி' என்று கீழ்ப்படிந்தேன், அதுதான் எனக்கு கிறிஸ்மஸ் என்றார். வானகத் தந்தை முதல் புனித சூசைவரை கூறியவற்றைச் சுருக்கி என்னுள் கிரகித்துப் பார்த்தேன். கிறிஸ்மஸ் நாள் என்பது :

1. வானகத் தந்தையின் கிறிஸ்மஸ் - 'கொடுத்தல்'
2. மீட்பர் யேசுவின் கிறிஸ்மஸ் - 'தம்மையே இழத்தல்'
3. தூய ஆவியானவரின் கிறிஸ்மஸ் - 'இயல்புக்கு மேலாக செயற்படல்'
4. தாய் மரியாயின் கிறிஸ்மஸ் - 'உடலையும் உள்ளத்தையும் முழுமையாக அர்ப்பணித்தல்'
5. புனித சூசையின் கிறிஸ்மஸ் - புரிந்தாலும் புரியாவிட்டாலும் இறை திட்டத்தோடு ஒத்துழைத்தல்.

*ம.யோண்பற்றிக் யோய் பேர்சி*

# குடில் தேடிய குலமகனே நீயும் கலங்குவதேனோ?

இயேசுவின் பிறப்பானது பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு பெத்லேகம் என்னும் சிற்றூரில் நடந்தேறிய மாபெரும் நிகழ்வு. காலத்தால் நொந்து நொறுங்குண்ட உலகிற்கு நம்பிக்கை ஒளியைக் கொணர்ந்திடவே பாலகன் யேசு உலகம் முழுவதும் கண் துயிலும் நேரம் அமைதியான இரவினிலே புதிய உலகைப் பார்ப்பதற்கு உதயமானார்.

மனுக்குலத்தை மீட்க வந்த மாபரனுக்கு சத்திரங்கள் யாவும் மறுக்கப்பட்டன. மாறாக மாடடைத் தொழுவம் தான் அவரை வரவேற்று நின்றது. இன்று மனித உள்ளங்களாகிய சத்திரங்களையே யேசுபாலகன் தேடுகின்றார். ஆனால் எம் சத்திரங்களோ பொய்மை, அநீதி, பழிக்குப்பழி, பட்டம்பதவி என்னும் எண்ணங் களினால் புடமிடப்பட்டுள்ளன. இதை எண்ணியேதான் மெய்வருந்தி கண்ணுறக்கமின்றி காலமெல்லாம் கலங்குகின்றார்.

எத்தனை நத்தார்கள் வந்து போயினும் எமக்கு விடிவே கிடையாதா என கொடுஞ்சிறைதனிலே ஏக்கம் பெருமூச்சுக்களுடன் கண்ணீரும் கம்பலையுமாய் கைகளில் விலங்கோடு மாபெரும் வதைகளோடு வாடும் எம் இளைஞர்களது அழுகுரல் தான் கேட்டதுவோ? பாசப்பிணைப்புக்கள் பரிதவிப்பது தான் கேட்டதுவோ உம் மந்தைகளின் இன்னலுக்கோர் விடிவு தான் எப்போது?

இன்று எம் மண்ணின் அரங்கேறும் அசிங்கங்கள் சொல்லவும் முடியாது சொல்லியும் தீராது காமுகர்களின் கோரப்பிடியில் சிக்குண்டு தம்மையே இழக்கும் எம் பாவையர்களின் பரிதாப நிலை ஒருபுறம்.

குடும்ப வன்முறையால் பிளவுபட்டு நிர்க்கதியாய்
நிற்கும் குடும்பங்கள்தான் எத்தனை எத்தனையோ.
தாயின் கருவறை சிசுவின் கல்லறையாக சிதைகின்ற சிசுக்கள் இன்னும் பல, இவையே எம் நாட்டின் நிஜங்களாகின. இத்தனையும் பார்த்துத்தான் பாலகன் கலங்குகிறாரென புரியாத சங்கதி புரிந்தது இங்கெமக்கு.

அமைதியின் தூதனாக அவனியில் வந்துதித்த பாலகனே!
அமைதி தேடி அலையும் நெஞ்சம்
ஆண்டவரில் சரணாகதி அடையும் என்ற உணர்வோடு
இம் மண்ணிலே நிகழும் சமூக சீர்கேடுகள் சீர் செய்யப்படவும்
தகுந்த காரணமின்றி சிறைப்பட்ட எம் இனம் விடுதலையடையவும்
எம்மிடையே உண்மையான அன்பு, சகோதரத்துவம் சமத்துவம்
என்னும் மனித மாண்புகளை எமக்கருள்வாய் பாலகனே
மலரவிருக்கும் புதிய ஆண்டிலே புதிய விடியலை நோக்கிப்பயணிப்போம்
கலங்கி நிற்கும் பாலகனை களிப்புடன் வரவேற்போம் எம் உள்ளத்திலும் இல்லத்திலும்.

**- ஜே.லுசில்டாவாசுகி -**

# கிறிஸ்து பிறப்பு விழாவின் - அர்த்தம்

**Caring Sharing and Loving**

*"மனிதத்தை அன்பு செய்வோம்*
*மனிதம் வாழ எம்மைப் பகிர்வோம் / கொடுப்போம்*
*மனிதத்தை காப்போம்"*

**"கொடுப்பதில் இன்பம், பெறுவதில் இல்லை"**

கடவுள் மானிட சமுதாயத்தில் இரக்கம் கொண்டார். காரணம் ஆதாம், ஏவாளின் பாவம் இம் மனுக் குலத்தையும் பாவ படுகுழியில் சிக்கவைத்ததனால். இதிலிருந்து மானிடத்தை மீட்பதற்காக, மானிட சமுதாயத்தை பாதுகாப்பதற்காக கடவுள் கொடுத்த மாபெரும் கொடைதான். "இயேசுக் கிறிஸ்து". இறை தந்தையின் இதயத்தின் இரக்கம், அன்பின் மகத்துவம் எத்துணை போற்றுதற்குரியது.

கொடுப்பதில் இன்பம் என்ன என்று கேட்ட பக்தனுக்கு இறைவன் கூறிய பதில் கொடுத்துப்பார். பகிர்ந்து வாழ் என்பதாகும்.

இறைவன் மானிடரை மீட்க, மானிடத்தில் கொண்ட அன்பிற்காக தனது ஒரே மகனை பலியாகக் கொடுத்தார். "அன்பு என்ற ஓர் உணர்வு உள்ளத்தில் உதயமாகும் போது அது நிச்சயம் செயல் வடிவம் பெறுகின்றது. அதாவது அன்பிற்குப் பதிலாக ஏதோ ஒன்றை கொடுப் பதில் அது நிறைவடைகின்றது. இதுதான் உண்மை யான அன்பும் பகிர்வும். இதைத்தான் இறைமகன் இயேசு சொன்னார். "தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை"

ஆம் இறைவன் தன் ஒரே மகனை இவ்வுலகிற்கு ஏன்? எதற்காக? கொடுத்தார்? மனித சமுதாயத்தை பாவத்தளையிலிருந்து பாதுகாத்து மீட்டெடுக்கவே.



Sr.M.Milred
Holy Family Convent (Mirusuvil)

இங்கேதான் அன்பு, அக்கறை, பகிர்வு செயல் வடிவமாகியது.

இயேசுக்கிறிஸ்து தந்தையின் சித்தத்தை அன்போடு நோக்கினார். அவரது விருப்பத்திற்கேற்ப தனது நிலையில் இருந்து இவ்வுலகில் இறைமகன் எனும் மகிமையை இழந்து மண்ணில் மனிதனாக அதிலும் ஏழையாகப் பிறந்தார். இதனை ஓர் இழப்பாக அவர் கருதவில்லை - மாறாக இதை ஒரு தியாகமாகவே நினைத்தார் கண்டார். இறைதந்தைமேல் கொண்ட அன்பின் நிமித்தம் தன்னை விட்டுக் கொடுத்தார். இதனை (திரு. பிலி 2:1- ) பகுதிகள் கூறுகின்றது.

"கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை" அன்பு பகிரவேண்டியது. அதேவேளை ஒருவரை வாழ வைப்பதும், பாதுகாப்பதும் அந்த அன்பேதான்: இதையே இயேசு வாழ்ந்து காட்டினார். ஒருமனித பிறப்பினதும் வாழ்வினதும், அர்த்தம் - கொடுப்பதிலும் தம்மைத் தியாகம் செய்வதிலுமே அடங்கியுள்ளது. இதுவே எமக்கு இயேசு காட்டியது. இறை இயேசுவின் இவ்வுலக மானிடப்பிறப்பு - மனிதத்தை அன்பு செய்ய மனிதத்தைக் காக்க - இதற்காக தம்மை இழந்தார், தம்மை பலியாகக் கொடுத்தார். இதனால் அனைவரையும் தம்மக்களாக மீட்டுக் கொண்டார்.

இன்று மானிட சமுதாயத்தைச் சற்று நோக்கும் போது, கொடுப்பதில் அல்ல மாறாக தமக்கென அனைத்தையும் பெற்றுக்கொள்வதிலும் மற்றவர் வாழ்வுக்காகத் தம்மை இழப்பதிலும் பார்க்க, தாம் தாம் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதிலும், மற்றவரை அன்பு செய்வதில் கயவர்களாகவும் வாழும் நிலையையே நாம் காணுகின்றோம். தான், தனது இனம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற குறுகிய மனநிலைகளே இன்று எம் சமுதாயத்தில் நாம் காண்கின்றோம்.

நாம் கிறிஸ்துவின் பிறப்பு விழாவை அர்த்தமாகக் கொண்டாட அவர்காட்டிய பாதையை நாமும் பின் தொடர்வோம். கிறிஸ்துவின் அன்பின் பிறப்பை நாமும் எம் வாழ்வால் அர்த்தமாக்குவோம். எம்மிடம் இருப்பதை மற்றவரும் வாழ மனம் கோணாமல் பகிர்வோம். மனிதத்தை நேசிப்போம், தாராளமாக மனிதத்தை பாதுகாப்போம். ஏனென்றால் ஒவ்வொரு மனிதத்துக்குள்ளும் இருக்கின்ற இறை பிரசன்னத்தை மதிப்போம்" இதுவே கிறிஸ்து பிறப்பு விழாவின் அர்த்தமாகும்.

கிறிஸ்து பிறப்பு விழா - மகிழ்வின் விழாவாக அன்பின் விழாவாக, மனிதத்தின் மேன்மையைக் கொண்டாடும் விழாவாக அமைய வழிவகுப்போம். இயேசு மாட்டுக் குடிலில் மாத்திரமல்ல எம் உள்ளக்குடிலில், இல்லக் குடிலில் பிறக்க வழிசமைப் போம்.

## மனிதனை தேடிய மகனாய்...!

இதோ இன்னல்கள் தீர்க்க மின்னல்
மனிதனாய் மீண்டும் பிறக்கிறார்

ஆம் அவர் தான் அவதாரம் எடுக்கிறார்

உன்னையும் என்னையும் உருவாக்க
உலகில் பிறக்கிறார்

வாழ்வின் மதிப்பை வாழ்ந்து காட்ட
சாவின் மகத்துவத்தை சாதனையாக்கிட

ஏழைகள் கண்ணீர் செபங்கள் ஆகிட
துன்புறுவோர் உள்ளம் ஆலயம் ஆகிட

உறவுகளை இழந்தோர்
உறவைக்கண்டிட அநாதைகள் எல்லாம்
ஆதரவு பெற்றிட

பாவ வாழ்வு கழுவப் பெறஞான வாழ்வு
உலகினில் பூக்க

பூமியை தேடிய புனிதனாய் மனிதனை
தேடிய மகனாய் மண்ணில் பிறக்கிறார்
மரியின் மைந்தனாய்

T.C.G. றொகான
(புனித மடுத்தீனார் குருமடம்)

## குடும்ப செபம் மிக மிக அவசியமானது

தூரத்தில் இருந்து பார்ப்பவர்க்கு உல்லாசமாக வானில் அசைந்தாடும் பட்டந்தான் கண்ணுக்குத் தெரியும். ஆனால் அப்பட்டம் பறப்பதற்கு ஒரு மனிதன்தான் காரணம், அம்மனிதனுடன் ஒருபட்டம் ஒரு நூலின் மூலம் தொடர்பு வைத்துள்ளது என்பது உணரப்படுவதில்லை.

அதேபோல் நாமும் நம்மை இயக்கும் இயேசுவுடனும் தாய் மரியாளுடனும் குடும்ப செபத்தின் மூலம் தொடர்பு வைத்துக் கொள்வோம். அவ்வாறு செய்வதால் நம் குடும்பங்கள் சிதறிக் கட்டுப்பாடின்றிப் போகாது. நம் குடும்பம் இறையாசீருடன் மிளிரும். ஆனால் குடும்ப செபத்திற்கு எதிரி தொலைக்காட்சி.

இன்று தொலைக்காட்சி மூலம் எல்லாத் திரைப்படங்களும் ஆடல்பாடல்களும் நம் இல்லத்தினுள் புகுந்துவிட்டன. சில நாடகத் தொடர்களைப் பார்க்க வீட்டிலுள்ளவர்கள் எதையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கின்றார்கள்.

இதனால் மாற்றான் விதைத்த களையைப்போன்று நம்குடும்பத்தின் உறுப்பினரின் உள்ளங்களில் தொலைக்காட்சி உலகபிரகாசமான எண்ணங்களை விதைத்து விடுகிறது.



மரியதாஸ் விக்ரோறியா

மேலும் குடும்பத்தில் கணவன் மனைவி மக்களிடையே அன்பு உரையாடல், பாசவுணர்வுகள் மழுங்கிப் போய்விடுகின்றன. இத்தகைய தொலை காட்சியின் ஆக்கிரமிப்பினால் பலரும் குடும்ப செபத்தில் அக்கறை காட்டுவது கிடையாது தொலைக் காட்சியின் சின்னத்திரைகள் எந்த சூழ்நிலையிலும் குடும்ப செபத்தை அபகரித்து விடக்கூடாது. எத்தகைய தடைகள் ஏற்படினும் குடும்ப செபத்தை விடமாட்டேன் என்று தீர்மானம் கொண்டிருக்கவேண்டும்.

எவ்வளவு வேலையிருந்தாலும் மூச்சுவிடுவதை நிறுத்துவோமா? எவ்வளவு வேலையிருந்தாலும் சாப்பாடு, தூக்கம் போன்றவற்றை நிறுத்த முடியுமா? இதே சிறப்பை குடும்ப செபத்திற்கு தரவேண்டும். இயேசுவையும் தாய் மரியாளையும் குடும்ப செபம் மூலமாக நம் குடும்பத்திற்குள் அழைப்போம். பிறக்கப்போகும் புது வருடத்தில் நாம் எடுக்கும் தீர்மானம் சின்னத்திரைக்கு அடிமையாகாமல் குடும்ப செபத்தில் முழு நம்பிக்கை வைத்து செபிப்போம்.

# கவிதைச் சர



## தரணியில் எம் மீட்பர்

வேதங்கள் சொன்னபடி
பேதங்கள் பிணக்குகள் நீக்கி
ரொக்கமாக மனிதம் கொண்டு
சொர்க்கம் சேர்க்க இயேசு பிறந்தார்

கைகூப்பிய மலர்களாய்
கடவுள் திருவடி இடையர் வணங்க
மெய்ஞானிகள் காணிக்கை வழங்க
பொய்யா மொழி பெருமான் பெத்லகேமில் பிறந்தார்



அ.டினேஸ்
(யாகப்பர் ஆலயம், இளவாலை)

## இறைமகனே! மரிமகனே! உதய சூரியனாய் எழுந்திடுவாய்

அமைதியின் அரசரே! சமாதானத்தின் பிரபுவே!
வியத்தகு ஆலோசகரே; நீதியின் ஆதித்தனே!
தீமைகள் களையவும், மனிதம் மலர்ந்திடவும்
திருச்சபையின் திட்டங்களனைத்தும் ஜெயித்திட
இறைமகனே! மரிமகனே! உதய சூரியனாய் எழுந்திடுவாய்.

திருமதி. மரியம்மா
செபஸ்தியாம்பிள்ளை

## அமைதிப் பேரொளியே அகிலத்தை ஆளவாரும்

இறை இரக்கத்தின் உருவமாய்
மானிடரை மீட்பதற்கு விடியலின் ஒளிவிளக்காய்
மண்ணில் அவதரித்த அமைதிப்பேரொளியே
உம்மை ஆர்ப்பரித்து போற்றுகின்றோம்

பாவங்கள் நீங்க சாபங்கள் போக்க
இறைமகனாயிருந்தும் நீர் மனிதனாகி
விடுதலை தந்திட விமலனாய் அவதரித்தீரே
மகிழ்வுடனே களிகூர்ந்திடுவோம்

சேரநபன் அருள்மதி - மல்வம், உதவில்.




## மண்ணில் பிறந்த மைந்தன்

மார்கழிப் பனியில் - சின்ன
மாட்டுக் கொட்டிலில்
தூதர் பாடி மகிழ - அழைப்பின்
தாதநாமத்தோடு வந்து பிறந்தார் இயேசு

இருள் சூழ்ந்த உலகத்தை - தன்
இருவிழிகளால் கவர்ந்து
மண்ணுலகை மீட்க - உன்னதமாக
மண்ணில் வந்து பிறந்தார்

கரை கடந்து செய்யும் பாவத்
திரை நடுவில் மெழுகொளியாய்
கறைகள் பல துடைத்தெறிய
வந்து பிறந்தார் இயேசு பாலன்

நி.யோனபாக் தேவ அமிர்தா





## இரக்கத்தின் இதயம் இயேசு பாலா

இன்னலுற்ற மனுக்குலத்தின்
துயர் துடைக்க விளைந்தீரோ!
இறைமகன் நான் என்ற
நிலை களைந்து
இத் தரணியர் அடிநிலை
தமதாக்கிக் கொண்டீரோ!
அடியவர் உமதண்டை
ஈத்திடத் துணிந்தீரோ!
சிலுவையின் இழிநிலை போக்கிட
உமைத் தாழ்த்தி
வீரமாய் சிலுவையில் தம் தந்தையின் கரங்களில்
உம் ஆவிதனை ஒப்படைத்தீரோ!
பிறக்கும் போது
நீர் தேடிடவில்லை
உலகம் விரும்பும் செல்வத்தை
மாட்டுத் தொழுவமதை
தேடிப் பிறந்தீரோ
பாலகனே இயேசு பாலா
ஏழைகளை அதிகம் நேசித்தீரோ!
எளிநிலை இனிமை என
வாழ்ந்தும் காட்டினீரோ!

செல்வி. ஜீன் அடைக்கலம்.

## பாலகனே வரவேண்டும்

மரத்துப்போன மனங்களில்
இரக்கத்தினை இறைப்பாயா?
பரம்பொருளே! பாலகனே!
வரம் தர நீ வருவாயா?

வஞ்சனைகள் பெருகிவிட்ட - கல்
நெஞ்சங்கள் வாழும் பூவுலகில் - எம்மை
துஞ்சாமல் காத்து நீர்
செஞ்சுடராய் வரவேண்டும்

நி. குயின் யூடித் ,
எழில் ஒவியா

## புதிய ஆதாமின் புதுப்பிறப்பு

பெத்தலேகம் நகரினில் பிறந்த பாலகனே!
பெய்பனிக் குளிர் உன்னைப் பெரிதும் வாட்டுதே!
மென்மையான மேனியும் பூவிரல் எல்லாம்
மொத்தமாய் நடுங்குதோ அணைத்திட வரவே!

விடுதலை விதையை விதைக்க வந்த
விடியலின் நாயகனே எம் வெற்றி நாயகா!
படுதுயர் மாந்தரின் கண்ணீர் துடைத்திட
ஆதாமின் அவதாரம் அவதரித்து வந்தீரோ!

நி. நீஜிஸ்ரன்
(புனித மடுத்தீனார் குருமடம்)





## ஏழைகள் எம்மைத் தேடி வந்த பாலகன் இயேசு

சத்திரத்தின் மத்தியில்
மாட்டுத் தொழுவத்தில்
தீவனத் தொட்டியில்
துணிகளில் பொதிந்து
குளிரின் கொடுமையில்
குழந்தை யேசு
ஏழ்மையின் கோலம் பூண்டு
ஏழைகள் எம்மைத் தேடி வந்துள்ளார்.
எனவே நாமும்
எம் உள்ளங்களில்
பாலகன் யேசு குடியமர
பாவங்களில் இருந்து விடுதலை பெற்று
பாவமில்லா வாழ்வு வாழ
பரமன் யேசுவிடம்
பணிந்து வேண்டுவோம்.

அ.யூலியானா
(புனித வளன் கத்தோலிக்க அச்சக ஊழியர்)





## அவதரித்த பாலகன் அந்த

பாலகனே வருடா வருடம் பூமியில்
இங்கே பிறக்காமல் இறந்து கிடக்
இரவில் வீதிகளுக்கு போடச்சொல்
மன வீதியில் எப்பவும் வாழ்க்கை
என்ன விதப்பட்டும் கட்டிமுடிக்கத்தான்
எப்படி இல்லாமல் செய்யலாம் என்று சிந்தி
குருக்கள் உன் பலி கொடுக்கும் இடத்தி
இதய அறைகளில் கிடக்கிறது பல மூட்டை
கூடு வருகின்ற பாதையில் இல்
சுற்றி வலம்வரும் மனங்களில் எ
நீ ஏழ்மையில் பிறந்தாய் என்று பாடுவார்
உன் பிறந்தநாளில் மனிதர்கள் போவதி
நீ திறந்து விட்டாய் மந்தைகளை ப
மீண்டும் மானிடத்தின் கைகளில்
உன் பாடுகளை எல்லாம் மறந்து வ
ஆனால் மறக்காததைப் போல போட்

உயிரோவியன் புலே

# ங்கள் 2016



## ஒருமுறை வாருமய்யா

மார்கழிக் குளிரில் மாடடைக் குடிலில் மாமரி மடியில், மலர்ந்திட்ட பாலகனே! - எம் பாவம் போக்க, பாமரர் வடிவில் - இப், பாரினில் உதித்தீரே, வருடங்கள் போகுதய்யா, பாவங்கள் கூடுதய்யா, சுரண்டல்காரரும், சுயநலவாதியும், சுயமாய் வாழ்கின்றார்... கண்ணிய மனிதம், காலாவதியாகி, கடந்தன ஆண்டுகளே, இருளின் ஆட்சி, எப்போ விடியும், என நாம் ஏங்குகின்றோம், உயர்ந்தவன் தாழ்ந்தவன், பேதங்கள் நீங்கி... உயரிய சிந்தனை, உலகினில் பிறந்திட, ஒரு முறை வாருமய்யா,

திருமதி. கில்டா ஜெகதீசர்.

## பிறப்பாயோ யேசு பாலா

வார்த்தையுமே மனுவுருவாய் - வாழ்வில்
இருளகற்றும் ஒளிப்பிளம்பாய்
அருள்மழை பொழியும் இறை மகனாய்
மானிடர் இடர் நீக்கும் அருட்பொழிவாய்
பொங்கும் மனம் அமைதி பெற
கொதிக்கும் உள்ளம் குளிரடைய
கதிரவனாய் கார் முகிலாய்
அருள் பொழியும் அருளுற்றாய்
அவதரித்தார் இவ்வுலகின் கிறிஸ்து
எனும் யேசு பாலன்

ஒற்றுமையின் கூரையின்
கீழ் வாழ்ந்திடவே
வேற்றுமைகள் இல்லை எம்மில் இனியும்
வேதனையின் நாமம் இல்லை
ஒருமித்து மகிழ்வுறவே ஒன்றித்து வாழ்ந்திடவே
ஒற்றுமையின் ஒன்றிப்பால் உலகில்
இறையாட்சி மலர்ந்திடவே
வந்து நீயும் பிறப்பாயோ
யேசு பாலா

சாந்தினி சின்னத்துரை.





## மீண்டும் ஒருமுறை பிறந்திடு

வெண்பனி பொழிந்திடும் மார்கழியில்
எம்மன்னவன் பிறந்தார் மாநிலத்தில்
துன்பங்கள் துயரங்கள் துடைத்திடவே
எம் வாழ்வினை ஒளியாய் மாற்றிடவே
தம் மீட்பராம் இயேசு பிறந்தார் - அன்று

வெற்றியின் வீரனாய்
மாற்றத்தின் மீட்பராய்
ஏற்றத்தின் விடிவெள்ளியாய்
மானிடத்தின் விடியலுக்காய்
இப்புவிதனில் இயேசு பாலகா
மீண்டும் ஒருமுறை பிறந்திடு

த. அபிசானு

## மனிதம் காண மரிமகன் ஜனனம்

மனிதம் காண மனுமகனாய் அவதரிப்பவரே
மாநிலத்தில் மானிடர் யாருமில்லை
பாவத்தில் உழலுகின்ற பாருலகை
பாருமையா இங்கு ஒருமுறையாவது!

பெத்லகேம் தந்த பெருமகனே
வாய்விடா ஜீவன்கள் அங்கு
பாய்போட்டு இடம் தராவிட்டாலும்
பிறந்துவிடு மீண்டும் அந்தக் குடிலில்

P. மேரி திஷானா



## வந்து பிறந்திடு பாலா

அடிமைத் தனங்களும்
தாண்டவமாடும் இவ் உலகில்
அடிமை தளைகளை தகர்த்தெறிந்து
உம் அடியவர் எம்மை மீட்டுவி
வந்து பிறந்திடு பாலா!

வஞ்சகமும் சூழ்வினைகளும்
சூழ்ந்துள்ள இவ் உலகில்
சுற்றுச் சுவர் போலிருந்து
தனையர் எம்மை காத்திட
வந்து பிறந்திடு பாலா!

அ. யூமற் தவக்குமார்
(புனித மடுத்தீனார் குருமடம்)

## நிலைவாழ்வை நிலையாக்கும் மைந்தனின் வருகை

உலகின் ஒளியே வந்திடுவாய்
பொன்னொளி எங்கும் தந்திடுவாய்
அமைதியின் மன்னனே வந்திடுவாய்
அமைதியைப் பாரில் தந்திடுவாய்

செங்கோல் கொண்டு வந்திடுவாய்
செழுமை வாழ்வைத் தந்திடுவாய்
இம்மானுவேலே வந்திடுவாய்
இன்னருள் எமக்குத் தந்திடுவாய்

P.லுசிலா

## காலத்தில் மீண்டும் நிஜமாய்

வேகமான வாழ்வினில் வேகிடும் உள்ளங்கள்
வேலைகள் ஏராளம் வேதனைகள் தாராளம்
நின்று நிதானித்திட ஒருமணி நேரமில்லை
பிறர்நலம் காத்திட ஒருதுளி ஈரமில்லை

உதவி செய்திட நேரமில்லை
உபத்திரம் கொடுத்திட நேரமுண்டு
நன்மைகள் புரிந்திட நேரமில்லை
தீமைகள் எண்ணிட நேரமுண்டு
பிறர்பணி ஆற்றிட நேரமில்லை
தன்பணி ஆற்றிட நேரமுண்டு
வசதிகள் அளித்திட நேரமில்லை
வஞ்சனைகள் பேசிட நேரமுண்டு
பொறுமை காத்திட நேரமில்லை
பொறாமை காட்டிட நேரமுண்டு
அன்பினை வழங்கிட நேரமில்லை
வம்புகள் வளர்த்திட நேரமுண்டு
பிறர்தேவை அறிந்திட நேரமில்லை
பிறர்கதை பேசிட நேரமுண்டு
கைகொடுத்து உதவிட நேரமில்லை
கைவிட்டு அகன்றிட நேரமுண்டு
பாலக இயேசுவே மீண்டும் இக்காலத்தில்
பாரினை மீட்டிட பாவங்கள் போக்கிட
பாராளும் மன்னனாய் இரட்சிக்கும் மீட்பராய்
காலத்தில் நிஜமாய் பிறந்து வாரீரோ

திருமதி.ஜெ. வெலிசிற்றா றமணி

## ...ந்தரிக்கிறான் பூமியில்

*...பூமியில் பிறந்து விடுகிறாய் நீ*
*...து கிடக்கிறது மனங்கள் மட்டும்*
*...ச்சொல்லுகிறார்கள் வெளிச்சம்*
*...ற்க்கை முகம் தெரியாத இருட்டு*
*...த்தான் வேணும் என்கிறார் கோவில்*
*...ு சிந்திக்கிறார் வீட்டுத்திட்டம் வந்தால்*
*...் இடத்தில் கடுகளவும் இல்லை தூசி*
*...ு மூட்டை கட்டக்கூடிய அளிவு தூசிகள்*
*...ில் இல்லை ஒரு முற்கள் கூட*
*...களில் எத்தனை விச முற்கள்*
*...ாடுவார் ஆடுவார் போடுவார் நாடகம்*
*...போவதில்லை ஏழைகளின் வீட்டு பக்கம்*
*...களை பாவச்சிறையில் இருந்து*
*...ககளில் பாவத்தின் விலங்கு*
*...றந்து விட்டார்கள் மனிதர்கள்*
*...ல போட்டிருக்கிறார்கள் வேசம்!*

...ன் புலோப்பளை



## மனிதம் ஒரு புனிதம்

மனிதம் எங்கும் புதைக்கப்பட
எம் உரிமைகள் எங்கும் - மறுக்கப்பட
மாணவர்கள் களியாட்டத்தில் திழைத்திட
பெற்றோர்கள் தன் மகனை எங்கே
என்று ஏங்கித் தவிக்க - இப்
பாரினிலே வந்து பிறந்திடு

மனிதத்தின் மகத்துவமாய்
மனிதனாய் பிறந்து - உன்
புனிதத்தன்மையை இழந்து
எங்கே மனிதம் மதிப்பிழந்ததோ
அங்கேயே நீ
பிறக்க வேண்டும்

டொ. பியோரஞ்ஜித்
(புனித மடுத்தீனார் குருமடம்)



# இயேசுவிற்கு கிடைத்த பரிசு

சிறுகதை

- நி. புளோரன்ஸ்
யாழ் நிலா -

. இருள் சூழ்ந்த வானிலே, தெய்வீகம் தென்பட நாடே விழித்திருந்தது நள்ளிரவின் நடுப்பொழுதில். 'நத்தார்' என்ற நன்னாளில் ஊரே மகிழ்ந்திருக்க நான் மட்டும் இயலாமல் கட்டிலில் முடங்கிக்கிடந்தேன். வீட்டின் வெளிமுற்றத்தில் எனது சகோதரர்களும், மச்சான் மாரும் மிக்க சந்தோசத்துடன் வெடிகொளுத்தி விளையாடுவது என் காதுகளில் கபளீகரமாக ஒலித்தது. "எனக்கு மட்டும் இந்த நிமோனியா வந்திருக்காட்டில் அவை எல்லாற்றை பட்டாசையும் நானே கொளுத் தியிருப்பன்..." என் முழு விசனமும் ஒரு பெருமூச்சாய் வெளிப்பட அம்மா என் அருகில் வந்து நெற்றியில் தொட்டுப்பார்த்தாள். "கொஞ்சம் காய்ச்சல் விட்டிருக்குது." என்றவாறு "தம்பிராசா எழும்பணை... ஏலுமாயிருக்கே?" என என்னை மெதுவாக எழுப்பினாள்.

"கதைக்கவே ஏலாதம்மா கைகால் எல்லாம் முறிச்சுப் போட்டமாதிரியிருக்குது" என்றது தான் தாமதம், அம்மாவின் கண்கள் கனமாரி பொழிந்தன. " என்ர பிள்ளை... ஆற்ர கண் பட்டுதோ தெரியேல... பெருநாள் திருநாளில நடக்கேலாமல் கிடக்கிறான்" அம்மாவின் புலம்பல் எனக்கு யாரோ ஒவ்வொரு உரோமத்தையும் ஒவ் வொன்றாக இழுப்பது போல் வலித்தது.

மெதுவாக எழுந்து அம்மாவைப் பார்த்தேன். "ஹப்பி கிறிஸ்மஸ் அம்மா" என்றேன் "ஹப்பி கிறிஸ்மஸ் ராசா..." என்று சொல்லி, என் நெற்றியில் குருசுபோட்டு முத்தமிட்டாள், பிறகு "நாங்களெல்லாரும் ராப்பூசைக்கு போறம், நீ ஏலுமெண்டால் விடியப் போவன்... நான் கதவை வெளிப்பக்கம் பூட்டிவிடுறன். ஏதும் அவசரம் எண்டால் போன் பண்ணு." என்றவாறு எழுந்து போனாள்.

நேரம் இரவு பதினொன்றே முக்கால் எல்லோரும் பூசைக்குப் போய்விட்டனர். திடீரென சமையலறைக் குள் கேட்ட சத்தம், என்னை 'திடுதிப்' என எழச்செய்தது. "என்ன கோதாரி, பலகாரந் தின்ன பூனை வந்திருக்காக்கும்" என்றவாறு சமையலறைப் பக்கம் மெதுவாக எட்டிப் பார்த்தேன் சமையலறை ஒளிர்ந்து கொண்டிருந்தது "அம்மா லைற் ஓஃப் பண்ணாமல் போட்டாவாக்கும்..." என்றவாறு கட்டிலை விட்டு எழமுயன்றேன்.

என்ன புதுமை?... எந்தவிதமான நோ, வலி, உளைவு களைப்புமின்றி நிற்க முடிந்தது. நிற்க மட்டுமல்ல, நடக்கவே முடிந்தது "எல்லாம் கடவுள்தான்" என்றவாறு கழுத்தில் கையை வைத்தேன். காய்ச்சலைக் காணவில்லை நூறு தரம் துள்ளிப் பார்த்திருப்பேன் எந்த களைப்புமில்லை மனதில் மகிழ்ச்சி ஊற்றெடுத்தது: "அம்மா வரவிட்டு நிறைய வெடி கொளுத்தோணும்" என்றவாறு வேகமாக விரைந்தேன் சமையலறைக்கு.

அங்கே! நாலைந்து மலைகள் எனது தலையில் விழுந்தது போல் பேரதிர்சியாயிருந்தது. சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்று விட்டேன். வெள்ளை ஆடையும் சிவப்பு அங்கியும் அணிந்தவாறு ஒருவர் கேக் சாப்பிட்டுக் கொண்டி ருந்தார். மின்குமிழில் இருந்தல்ல அவரது உடலிலிருந்தே ஒளி பிறந்து கொண்டிருந்தது. "யாரிவர்? இயேசு வாக இருக்குமோ? என்றவாறு அருகில் நெருங்கினேன். சந்தேக மேயில்லை அவர்தான்... பூட்டிய கதவினூடாக வேறு யார் வீட்டுக்குள் வர முடியும்?

பேசுவதற்கு நா எழவில்லை சமாளித்துக் கொண்டே "ஹ... ஹப்பி பேர்த்டே இயேசப்பா..." என்றேன். சட்டெனப் பின்னால் திரும்பிப்பார்த்தவர், "அட நீயா... எழும்பீற்றியா? வாவன் கேக் சாப்பிடுவோம்" என்று கூப்பிட்டார் "இயேசுவுக்கு தமிழ் தெரியுமா? எபிரேயம்தானே கதைத்தவர்" என்றொரு மடச்சந்தேகம்எழுந்தாலும், உலகை ஆளும் வல்லவர், பாவிகளின் இரட்சகர், ஏழைகளின் நண்பர் இந்தப் பாவியின் வீட்டில் கேக் சாப்பிடுகிறாரே என்ற எண்ணமும் மனதில் தோன்றாமலில்லை.

காய்ச்சலுக்குகூட நடுங்காத நடுக்கத்துடன் அவர் கையிலிருந்த கேக் துண்டை வாங்கினேன். "இயேசப் பாவை ஒருக்கா தொட்டுப் பாப்பம்" என்ற எண்ணம் மின்வெட்டவே, கேக்கை வாங்கும் சாக்கில் அவரது விரலொன்றைத் தொட்டேன். மாசில்லாத குளிர்ந்த நீரால் என் உடல் முழுவதும் கழுவியது போல் புத்துணர்வு பெற்று சிலிர்த்து நின்றேன். "ஏன் யேசப்பா கோயிலுக்கு போகாம இஞ்ச வந்தனீங்கள்?" எனக் கேட்கலாமென மனதில் நினைத்தபோதே "அங்க போய் ஏனப்பு? எத்தினை சனம் பக்தியோட வருகுது? அடுத்தவன்ர நகையைப் பார்க்கவும் உடுப்பைப்பாக்கவும்தானே வரீனம்" என்றார்.

""இயேசு நல்லாப் பேச்சுத்தமிழில விளாசித்தள்ளுறார். அவர் சொல்லுறதும் சரிதானே" என நினைக்கும் போதே தொடர்ந்தார். "சரி கோயிலுக்குப் போறியள்... கிறிஸ்மஸ் நாளிலயாச்சும் அந்த வெளியில யிருக்கிற ஏழையளுக்கு ஏதாச்சும் குடுப்பியளே! அதுவும் இல்லை. வெடிவெடி யெண்டு செலவழிக்கிறதில கொஞ்சம் குடுத்தால் என்ன? நான் கேட்டனானே வெடிகொளுத்தச்சொல்லி?" கேட்டாரே நாக்கைப் பிடுங்கும் கேள்வியொன்று.

தான் வாங்கிய சாட்டையடிகளில் ஒன்றை எனக்குத் தந்தாரோ தெரியவில்லை. அவரது கேள்வி என் மனச் சாட்சியை சுக்குநூறாக சுட்டுத்தள்ளியது. என்னிடம் பதிலில்லை கையைப் பிசைந்து கொண்டு நின்றேன்.

"க்...க்...க்" அவருக்கு விக்கிவிட்டது போல எங்களது 'பிரிட்ஜ்' ஐ திறந்து தண்ணீர் எடுத்துக் குடித்தார். நான் உரிமையுடன் சென்று அவரது நெஞ்சை நீவிவிட்டேன். இப்போது அவரைத் தொட எனக்குப் பயமாகவிருக்க வில்லை. மெதுவாக என் கையில் ஒரு முத்தம் கொடுத்தார். என்ன அதிசயம் இது?!! அவரது திருவாயின் பதிவுகள் என் கையில் பதிந்துவிட்டன. வெரோணிக் காவின் வெண்துணிபோல்.

"உன்னைப்போல குழந்தையள எனக்கு செரியாப் பிடிக்கும் ஆனாலென்ன?... இப்ப எல்லாமே பழுதாகிக்கொண்டு வருகுதுகள்." என்று கவலை தோய்ந்த குரலில் கூறினார். "ஏன் யேசப்பா?" என்று வினாவி னேன் நான் எதுவும் அறியாததுபோல. "என்னவோ?... படிப்புப் பாடமொண்டுமில்ல. எப்ப பார்த்தாலும் போனும் செல்பியும் இன்ரநெற் கூகிலும் பாவிக்கிறது. பரவால்லை. அதுகளில நல்லதையா தேடுகிறீனம்? ஆபாசமும் சினிமாவுமல்லோ முன்னுக்கு நிக்குது... செபதவமு மில்லை. தாய்தகப்பன மதிக்கிறதுமில்லை." இரைந்து தள்ளினார். பயந்து போய்விட்டேன்.

"அதுசரி ஒவ்வொரு சாதிக்கெண்டும் ஒவ்வொரு கோயில் இருக்குதாம். மெய்யே?" என்னைக் கேட்டார். பதில் கூறமுடியாமல் நான் திண்டாடினேன். "இருக் கெண்டு சொன்னால் மனுசன் என்னோடயல்ல பாஞ்சு விழும்? என்ன செய்வம்?" எனப் பயந்தேன். கதையை மாற்றப் பல வழிகளில் யோசித்தேன் சில நொடிகளில் ஒரு வழி பளிச்சிட்டது. இதயங்களை அறிபவர் இயேசு என் எண்ணங்களை அறிந்தாரோ என்னவோ? சிறு புன்னகையை வருவித்துக் கொண்டார்.

அதைக்கண்டும் காணததுபோல் நடித்துக்கொண்டு "யேசப்பா, மனுசர் செய்யிற பாவமெல்லாம் எங்க போய்ச்சேரும்?" என்று கேட்டதுந்தான் தாமதம், அவரது கண்களில், கனிவு சேர்ந்த கண்களில் இரு நீர்த்துளிகள் தென்பட்டன. "இதென்ன கரைச்சலடா, அம்மாதான் அழுறாவெண்டா, இயேசப்பாவுமே... கேக்காம விட்டிருக்கலாம்" என்னை நானே கடிந்து கொண்டேன்.

"இஞ்சபார்" என்றவாறு தன் திரு இருதயத்தை எனக்கு திறந்து காட்டினார். ஐயோ!!... "இதுவரை" பாவங்கள் யாவும் கோடிக்கணக்கான முட்கள் குத்திக் கிழிக்கும் அவரது திரு இருதயத்தை கண்டு ஆடிப் போய் விட்டேன். தம்மையே அறியாமல் என் வாய்பேசாத கண்களிரண்டும் மெழுகாக உருகின. "இதெல்லாம் என்ன யேசப்பா...?" அழுதுகொண்டே கேட்டேன்.

"எல்லாருஞ் செய்யிற பாவங்கள் தான் இதுகள்..." "சிலர் செய்யிற புண்ணியங்களால தான் ஒவ்வொரு முள்ளா எடுக்க ஏலும். ஆனாலென்ன? ஒரு முள்ளு போறதுக்கிடையில வேறொரு முள்ளு வந்திடும்" விசனப்பட்டுக் கொண்டார். அவரைப்பார்க்க பாவமாயிருந்தது கோபமும், கவலையும் சேர்ந்த விசித்திர மனோபாவம் பீறிட்டு எழ "சிலுவையில மனுசனை சாக்கொண்டது பத்தாமல் இப்ப முள்ளாலயும் குத்துறதா?" என சினந்து கொண்டேன்.

உறுதியான தீர்மானமொன்றுடன் "இனிமேல் பாவம் செய்து உங்களைக் காயப்படுத்த மாட்டேன் யேசப்பா..." என்றேன். கண்களில் வழிந்த கண்ணீர் கோடாகப் பதிந்துவிட்டிருந்தது. "இதை விடப் பெரிய பரிசு இண்டைக்கு எனக்குக் கிடைக்காது" என என்னை அன்புடன் அணைத்துக் கொண்டார். கோவில் மணி ஒலித்தது, பாலன் பிறப்பின் அருட்சமிக்ஞையே அது. மெதுவாக அவரது கரங்கள் விலகின கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தேன். அவரைக் காணவில்லை போய் விட்டாள், சமையலறை "குப்" என்று இருட்டாகியிருந்தது.

"விடிய அம்மாட்ட காசுவாங்கிக் கொண்டு போய் கோயிலுக்கு வெளியாலயிருக்கிறாக்களுக்கு சாப்பாடு வாங்கிக்குடுக்க வேணும். வெடி வாங்குறேல" என்றவாறு என் கையைப் பார்த்தேன். அவரது முத்தத்தின் அடையாளம் பிரகாசமாய் தங்க நட்சத்திரம் போல ஒளிர்ந்து கொண்டிருந்தது.

# பாலகனின் பிறப்பு பாரிற்கு அமைதி தரட்டும்

**"இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவை பெற்றெடுப்பாள், அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்"** (எசாயா 7:14.) என்ற எசாயா தீர்க்க தரிசியின் முன்னறிவிப்பு தூய கன்னிமரியாள் வழியாக இங்கே நிறைவேறியதை நாம் காண்கின்றோம்.

கிறிஸ்துவின் பிறப்பால் பாவ இருள் நீங்க ஒளி வீசியது. இதனால் பெருமகிழ்வு எங்கும் உண்டாயிற்று. இறையருள் உலகிலே பிரசன்னமாகி நாம் இறைவனுக்கு உரியவர்களாக மாறியுள்ளோம். விண்ணுலக மகிமை விண்விட்டு மண் வந்ததால், அனைவருக்கும் அமைதி ஏற்படுவதோடு தீமைகளில் இருந்து விடுபட்டு ஒளி வாழ்வில் மகிழ்ந்திருக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

இறைவன் நம்மை எவ்வளவு அன்பு செய்தார் என்றால் நாம் வாழ்வு பெறும் பொருட்டு தம் ஒரே பேறான திருமகனை உலகிற்கு அனுப்பினார். (யோவான் 4-9) என்னும் கூற்று இறைவனின் அன்பின் ஆழத்தை எடுத்து சொல்கின்றது.

இவ்விழாவை எளிமைக்கு முதலிடம் கொடுத்து பகிர்தல் விழாவாக நினைவு கூருவோம்.

விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத்தொட்டியில் கிடத்தினர். (லூக். 2:7) பஞ்சு மெத்தையில் தவழ வேண்டியவர் தீவனத் தொட்டியில் தரிசனம் தருகிறார்.

எனவே நாமும் எளிய மனம் கொண்டவராய் கிறிஸ்து பிறப்பைச் சந்திப்போம்.

பகிர்தல் கிறிஸ்தவ மதிப்பீடுகளில் மிக உன்னதமான செயற்பாடாகவும் உண்மையான களங்கமற்ற அன்பின் வெளிப்பாடாகவும் உள்ளது.

பகிர்தல் மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றது. பகிர்வுக்கு எம்மை அழைக்கின்றது கிறிஸ்து பிறப்பு விழா. இன்று எமது அயலிலும் பங்கிலும் பல தேவைகளோடு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டவன் யேசு இறைத்தன்மையில் இருந்து இறங்கி வந்து ஏழையாக பிறந்தார்.

ஏழைகளாக்கப்பட்ட மக்களிலே பாலக யேசுவை காண முற்படுவோம்.

அவரின் அன்பையும் இரக்கத்தையும் மனித நேயத்தையும் கொடுக்க முன்வருவோம். எமக்கான கிறிஸ்து பிறப்பு விழாவின் செலவுகளின் ஒரு பகுதியையும் தியாகம் செய்து, மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதன் ஊடாக எம் உள்ளங்களில் பாலக யேசுவை வரவேற்போம்.

எளிமையின் விழாவாக பகிர்தலின் விழாவாக அமையும் கிறிஸ்து பிறப்பு விழா உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக. (லூக்.2-14) என்ற இறைவார்த்தைக்கு அர்த்தம் கொடுப்பதாக அமையட்டும்.

**சாந்தினி சின்னத்துரை.**


## 14ம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



மலர்வு 07 . 06 . 1922

உதிர்வு 28 . 11 . 2002

அமரர்

**திரு. ஆதாம் தோமஸ்**

அன்புக்கு இலக்கணமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பார்போற்றும் உத்தமனாய்
ஏக புதல்வனாய்
பாரினிலே வளம் பெற்று நீர் வாழ்ந்தீர் ஐயா

ஐயா! ஆண்டு ஒன்றல்ல இரண்டல்ல பதினான்கு ஆண்டுகள் ஒடி மறைந்ததய்யா - ஆனால், ஐயா உம் நாமம் ஒவ்வொரு கணப்பொழுதும் உச்சரிக்கிறதே. எம் ஐயா எங்கள் மனதில் உறவில் என்றும் நீங்காமல் நிறைந்திருப்பார். உம் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும். ஆறுதல் கொள்ளும் ஆண்டவன் மடியில் அமைதியில் இளைப்பாற இணைந்து நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் நினைந்துருகும்
பாசமிகு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கடற்கரை வீதி,
பரித்தித்துறை.

Advt-121/16

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 - 03 - 1950

உதிர்வு 18 - 12 - 1995

**அமரா தேவசகாயம் சிமியோன்**
**[அனிபபா]**

**"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"**


ஆண்டுகள் இருபத்தொன்று ஆனதே - ஐயா
ஆறவில்லை எம் இதயம்
இன்று வரை நம்பமுடியவில்லை - ஐயா
நீங்கள் இறைவனை சேர்ந்தீர்கள் என்று
வாழ்ந்திடும் காலம் எல்லாம் - ஐயா
நாம் மறப்போமா உம் புன்சிரிப்பை
சிரித்த உம் முகம் காண வருந்தி நாம் அழைக்கின்றோம் - ஐயா
எம்முடன் திரும்பவும் வந்து சேர்ந்திருங்கள்

*என்றும் நினைவுகளுடன்*
*குடும்பத்தினர்*

நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

Advt-122/16

## 5th Year Remembrance



Born :
12.07.1942

Called to Rest :
22.12.2011

*In Loving Memory of*

**Dr. Mariceleenpillai Mariathasan (J.P)**

**(Perinpam - Valvettithurai)**

**M.O.H. Municipal Council. Jaffna (2001-2011)**

Appa!
The Beauty of your smile still
Brightens up our day
The Kindness and Compassion which filled your Heart
- inspired us

You are in our Hearts
You walk beside us unseen unheard - but always near

Ave Maria,
72, Temple Road,
Chundukuli, Jaffna.

From
Wife, Children, Grandchildren,
Relatives and Friends.

Advt-119/16

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08 - 10 - 1981

உதிர்வு 28 - 12 - 2015

அமரர்

**அந்தோனிமுத்து ஜெனிபேட்**
**(தனேஸ்)**

**"ஆண்டவர் கரத்தில் நீ அழகிய மணிமுடியாய் இருப்பாய்"**

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப்பிள்ளையாக வாழ்ந்த வேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறா சோகமுடன் மனமுருகி புலம்புகின்றோம்
கனத்த இதயமுடன் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்
ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை எம் மனம் காயவில்லை எம் ஈரவிழிகள்...

Advt-123/16

*குடும்பத்தினர்*

## மகிழ்வின் நாளிதுவே ஆர்ப்பரிப்போம்

மாற்றங்கள் காணாத
மனித மனங்களை
மன்னன் இயேசுவே உம்வரவால்
மனம் மாற்றிட வேண்டும்

ஏற்றத்தாழ்வுகள் நீங்கி
எல்லோரும் ஏற்றமடைந்திட
நீதியின் கதிர்கள் உம்வரவால்
உலகை நிரப்பிட வேண்டும்



சேரரூபன்ஷைர்வில் - மல்வம், உடுவில்.



## 8 ஆண்டுகள் 10 ஆண்டுகள்



பஸ்ரியாம்பிள்ளை சூசையா

பிறப்பு : 10.09.1935
இறப்பு : 01.02.2008



சூசையா றீற்றம்மா

பிறப்பு : 16.02.1933
இறப்பு : 24.12.2006

"சீவியத்தில் எம்மை நேசித்தவர்களே
மரணத்திலும் எம்மை மறவாதீர்கள்"

Advt-125/16

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 7ம் மாத நினைவஞ்சலி | முதலாவது வருட நினைவஞ்சலி



மனுவேற்பிள்ளை யேசுரட்ணம்

தோற்றம் - 1932.08.04
மறைவு - 2016.05.11



யேசுரட்ணம் மாக்கிறேற்

தோற்றம் - 1938.06.11
மறைவு - 2015.12.31

ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரை அவர்தம் தூதர்
சூழ்ந்து நின்று காத்திடுவர் [தி.பா. 34:7]

அன்னாள் பதியின் அரண்களாய்
ஏழைகளுக்கு உதவும் கரங்களாய்
இணைபிரியா கரம் கோத்து
இறைபதம் அடைந்த எங்கள்
வரங்களே

வாரங்கள் கடந்து போனாலும்
வருடங்கள் உருண்டு போனாலும்
வாட்டுதம்மா உங்கள் துயர்
வரிகளில் வழக்கையிலே...

உன் துணை வேண்டுமென்று
உன்னுடனே எடுத்தாயோ
துடிப்புள்ள உம் உறவுகள்
துடிதுடிப்பார்கள் என்பதை
மறந்தாயோ

ஓராண்டுகள் ஈருயிரையும்
கொடுத்துவிட்டு
உங்கள் நாலு உயிர்கள்
நாதியற்று கிடக்குதம்மா
நானிலத்தில் நீங்கள்

இல்லாவிடினும் நாதனோடு (கடவுள்)
நீங்கள் இருக்கிறீர்கள் என்று எண்ணி
எம் ஏக்கங்களை
ஏமாற்றிக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Advt-124/16



# கலியுகத்தில் பாலகனின் கதி என்ன?

மனிதனை மீட்க மீண்டும் ஒரு மனித அவதாரம் மீள்கிறது. ஆண்டு 2016ல் என கற்பனைச் சிதறல்களை உங்கள் வாசனை விருந்திற்காகச் சிந்துகிறேன். இது பெத்தலையில் நிகழ்ந்தது அல்ல. இனப்பிரச்சினை, வாள்வெட்டுக்கள், துஸ்பிரயோகங்கள், மர்மமான சரித்திரங்கள் என எல்லா அநியாயங்களும் கூட்டுரு எடுத்து தலைவிரித்தாடும் எம் ஈழ நாட்டில் மரியாளிற்கும் சூசைக்கும் தம் பூர்வீக பூமியான யாழ் நகரில் திருமணம் நடந்து, சூசை தனது தொழில் வாய்ப்பைத் தேடி அண்டிப்பிளைக்கச் சென்று தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்பு மாநகரின் தெகிவளையில் குடியேறி வாழ்க்கை நடத்தி வருகின்றனர். மரியா நிறை மாத கர்ப்பினியாய் இருந்த போது ஜனாதிபதி ஆணைக்கிணாங்க தம் பூர்வீக பூமியில் தம் பெயர்களை பதிவு செய்ய வேண்டிய நிலை உண்டானது. இதனால் மார்கழி மாதம் 24ம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பிலிருந்து புகைஊதும் யாழ் தேவியில் பயணத்தை ஆரம்பிக்கின்றனர். பேரினவாதப் பூமிகள் எல்லாம் கடந்து யாழ் நோக்கி விரைகிறாள் யாழுக்கே உரித்தான தேவி. பருவ கால மாற்றத்தினால் கடும் குளிர் பொழிகின்ற நேரத்தில் புகைவண்டி ஐந்து நிமிட பயணம் மீதமிருக்க இடைவெளியில் நிற்கிறது. தனியார் பிரச்சினைக்காய் தனிப்பட்ட வாகனத்தை நிறுத்துவது போல புகைவண்டி நிறுத்தப்பட்டதாக செய்தி கசிந்தது. மரியும் சூசையும் குளிரின் கூதலுக்குள் யாழ் நோக்கி நடக்கத் தொடங்குகின்றனர். யாழ் நோக்கி நெருங்குகையில் மரியாளிற்கு பேறுகால வேதனையின் வாட்டம் மலை ஏறியது. சூசை கதிகலங்கியவனாக தாள்பாள்கள் தூங்கிய கதவுகளில் தட்டிப் பார்கின்றான். மரியாளோ சூசையின் வலக்கையை பற்றியவாறு வேதனைக் கூச்சல்போடுகிறாள். வந்திருப்பது மரியும், சூசையும் எனத் தெரிந்திருந்தால் கதவுகள் திறக்காதா, என்ன? திறந்தனதான் சில கதவுகள், ஆனால் திறந்தவர்களோ கண்ணிருந்தும் குருடர்கள். வானவன் முன்னறிவித்த தெய்வக்குழந்தைக்கு இந்நிலையா! என்று கலங்கி வீடு வீடாக கெஞ்சிக் கெஞ்சி நாவரண்டு போயினான் சூசை. நீ யார்? உனக்கு என்ன வேண்டும்? என்றான் ஒருவன். உன் ஊர் எது என்றான்? மற்றொருவன். உன் பூர்வீகம் எது என சொல்? என்றான் இன்னொருவன். உனக்குப் பிச்சைபோட எனக்கு இது நேரமில்லை? என்றாள் ஒருத்தி. "இந்த வீட்டில் ஆட்களில்லை" என உள்ளிருந்து கொண்டே உயர்ந்தது ஒரு குரல். குறுகலான சந்துகளில் இருந்து ஒருவாறு மீண்டு ஒரு காப்பற் வீதிக்குள் நுளைகின்றனர். அருகே ஒரு தேவாலயம் தென்பட, உதவிக்காக நாட முற்பட; வாயில் காப்போன் கூறினான் "உன் பெயரை சொல்? நீ இக் குலத்தவனா என பெயர் பட்டியலை பார்க்கின்றேன்" என்றான். இது சூசைக்கு வெந்தபுண்ணில் வேல் பாய்ந்தது போல வருத்தியது. இனி இந்த மனிதர்களை நம்பி ஒன்றுமே ஆகாது (அன்று ஒரு காலத்தில் மாட்டுக்கொட்டிலாவது கொடுத்து உதவினார்கள். இன்று அதுவுமில்லை) என உணர்ந்து மரியாளை கையில் ஏந்தி யாழ் போதனா வைத்தியசாலை நோக்கி விரைய கால் வைக்கிறான். நான் உதவுகிறேன் என்ற குரல்... திரும்பிப் பார்க்கிறார் போரில் ஒரு கையையும், ஒரு காலையும் இழந்த இளைஞன். அவன் துணையோடு வைத்தியசாலை அடைகிறார். அவனுக்கு தன் கண்களால் நன்றி கூறினார். உட்பிரவேசிக்கின்றனர். அங்கே திருக்குடும்பத்தின் தவப்புதல்வன் மனுவாகின்றார். ஞானிகளின் வருகையையும், இடையர்களின் தரிசிப்பையும் எதிர்பார்க்காமலே மறுநாளே புறப்பட தயாராகின்றனர். தற்பொழுது மனிதர்களற்ற மண்டையோடு எனும் கல்கத்தாவிற்கு. ஏனெனில் இங்கிருந்தால் சிறுவயதிலேயே பிலாத்துவிடம் கையளித்து விடுவார் என்று உணர்ந்து.

J.J. எமில்ரன்
(புனித மடுத்தினார் குருமடம்)

## மண்ணுலகே போற்றிடு

மண்ணுலகே! அகமகிழ்ந்து போற்றிடு
கிறிஸ்து பாலனாய் பிறந்துள்ளார்
மண்ணுலகே! வியந்து போற்றிடு
மீட்பர் நமக்காய் உதித்துள்ளார்



மண்ணுலகே! உயர்வாய்ப் போற்றிடு
மானிடர் எமது பாவக்கறை துடைத்திட
விண்ணிற் சிறிந்த வெண்தாரகை
மண்ணில் செந்தாமரையாய் மலர்ந்துள்ளது

அனோஜியஸ்.



## 1ம் வருட நினைவஞ்சலி



திருமதி மரிய மாசர்ல்லா மலர்
மரியரட்ணம் (மலர் ரீச்சர்)

மண்ணில் : 16.09.1927
விண்ணில் : 28.12.2015

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது" (சங்கீதம் 84)

இரக்கத்தின் ஆண்டவரே!
நீர் உம்பிடம் அழைத்துக் கொண்ட மலர் மரியரட்ணம் எனும் உமது அடியாளின் பாவங்களையும் குறைகளையும் மன்னித்து முடிவில்லாத வாழ்வையும் புனிதர்களின் தோழமையுள்ள உறவையும் கொடுத்தருளும்.

மரியரட்ணம் [கணவர்], அருட். ம. யோய் CMF [மகன்],
அருட். ம.றோய் [மகன்]

Advt-126/16



## பாலனே பிறந்துவிடு....

பாலகனே! நீ பிறந்துவிடு
விடிவெள்ளியாய் மண்ணிலே -
நீ
பிறந்துவிடு
களங்கள் புனைந்து -
மனிதனை
அழிக்கும் அவனியில்
கவனித்துப் பிறந்துவிடு

ஸ்.ஸ்ரீபன்றாஜ்
(புனித மடுத்தீனார்
குருமடம்)

# திருப்பலி வாசகப் பணியாளர்களுக்கான சில படிமுறைகளும் அறிவூட்டல்களும்.

(கடந்த வார தொடர்ச்சி .....

## தற்போதைய ஆயத்தம்

11. வாசகர், திருப்பலி ஆரம்பிப்பதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக வந்து வாசகத்தைப் பார்க்க வேண்டும். குறிப்பிட்ட வாசகம் இருக்கும் பகுதி அடையாளமிடப்பட்டுள்ளதா, நாடா அல்லது அடையாளம் சரியான பக்கத்தில் உள்ளதா என்றும் கவனிக்க வேண்டும்.

12. வாசக மேடையில் வாசகப் புத்தகம் சரியான பக்கத்தில் திறந்த நிலையில் இருக்க வேண்டும்.

13. திருப்பலிக்கு முன் ஒலிவாங்கி (மைக்) அனைத்தும் பொருத்தப்பட்டு, சரிபார்க்கப்பட்டிருக்க வேண்டும். வாசகர் வாசக மேடையில் நிற்கும்போது அதனை ஊதவோ, தட்டவோ அவசியமில்லை.

14. வாசகர் பீடத்திற்கு சென்ற பின்னர், குரலைச் சரபார்ப்பது, மூக்குக் கண்ணாடியைத் துடைப்பது, உயர்ந்த மிதியடி (பாதணி) அணிந்து நிற்பது, தலை முடியை பரப்பியவாறு நிற்பது போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

15. வாசிக்கும்போது வாசிப்பவர் ஒலிவாங்கி (மைக்கை) தமது உயரத்திற்கேற்றவாறு சரிசெய்து அதற்கு நேராக நின்று வாசிக்க வேண்டும். ஒலிவாங்கி அதிக தூரமாகவோ, அல்லது மிக நெருக்கமாகவோ இருக்கக்கூடாது. வாசிக்கும்போது வாசிக்கப்படும் சொற்களின் எதிரொலியை அவதானிக்க வேண்டும்.

16. வாசிப்பவர் திருப்பலிக்கான வாசகங்களை வாசிக்கும்போது, இரு கரங்களையும் வாசகப் புத்தகத்தின் மேல் வைத்தபடி, நிதானமாகவும், தாழ்மையுடனும் இறைவார்த்தையை வாசிக்க வேண்டும்.

17. திருப்பலியில் குருவானவரின் ஆரம்ப செபம் முடிவடைந்ததும் (அதாவது வாசகத்திற்கு முன்பு) மூன்று வாசகர்கள் (முதலாம், பதிலுரைப்பாடல், இரண்டாம் வாசகர்கள்) எழுந்து பக்தியாகச் சென்று பீடத்தை நோக்கி தலை வணங்கி, வாசக மேடையை நோக்கிச் செல்ல வேண்டும். ஏனைய இருவர் வாசக மேடைக்கு அருகில் உட்காரவும்.

## எடுத்துரைப்பு

18. வாசகர் வாசகமேடையை அடைந்த பின்பு, மக்களைப் பார்த்து உதாரணமாக: திருத்தூதரான புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம், அதிகாரம்... திருவசனாங்கள்... எனக் கூறிவிட்டு சற்று மௌனம் காக்கவும் (1-4 வரை மௌனமாக எண்ணவும்) திரு மௌனம், இறைவன் ஒரே நேரத்தில் அமைதியும் வார்த்தையுமானவர், இறைவனை அமைதியில் தொடர்பு கொள்வது சிறந்தது. அமைதி என்பது சக்தி மிக்கது. பின்பு செப உணர்வோடு இறைவார்த்தையை வாசிக்கத் தொடங்க வேண்டும்.

19. இறைவார்த்தையை வாசிக்கும்போது, வேகம், சொற்களில் ஏற்றம், இறக்கம், முற்றுப்புள்ளி, கருத்து ஆகியவற்றை நன்கு அவதானிக்க வேண்டும்.

20. இறைவார்த்தையை மெதுவாகவும், தியான நிலையிலும், அன்பாகவும் வாசிக்க வேண்டும். செவிமடுப்பு வழியாகத்தான் விசுவாசம் பிறக்கின்றது. (ரோம. 10:17)

21. இறைவார்த்தை வாசிப்பது ஒரு செபம் ஆகும். மாறாக திறமையை வெளிப்படுத்தும் ஒரு களம் அல்ல. இறைவார்த்தை மனதுக்கு ஒளியும், திடத்திற்கு தீயுமாகும். "நீங்கள் யாரிடம் பேசுகிறீர்களோ, அவரின் உந்துதலினால் விசுவாசம் ஏற்படும். விசுவாசத்தினால் எதிர்பார்ப்பு உண்டாகும். எதிர்பார்ப்பினால் அன்பு உண்டாகும்." புனித அகுஸ்தினார்.

22. இறைவார்த்தை வாசிக்கப்படும்போது, வாசகர் தன்னுடைய வார்த்தையை அல்ல, மாறாக இறைவனுடைய வார்த்தையை தன்னுடைய சொந்தக் குரலால் மற்றவர்களுக்கு எடுத்துரைக்கிறார் என்பதை உணர வேண்டும்.

23. வாசகர் வாசிக்கும்போது இடையிடையே மக்களை அன்பாக பார்பது நலமாகும்.

24. இறைவனுடைய வார்த்தையானது வாசிப்பவரின் உதடுகள் வழியாக ஆலயத்தினுள் முழங்கப்பட்டு விசுவாசிகளின் காதுகளுக்கு எட்டி இதயங்களைத் தொடவேண்டும். இவையாவும் நுணுக்கமான ஆன்மீக ஆயத்தத்தின் வழியாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

25. நல்லதொரு கருத்துள்ள திருவிவிலிய வாசகமானது, அன்றைய நாளுக்கான இறையனுபவத்தை பெற்றிட உதவியாயிருக்கும்.

26. வாசக முடிவில் சற்று நேரம் அமைதிகாத்து, (1-4 வரை மௌனமாக எண்ணவும்) அதன் பின்னர் வாசகர் மக்களைப் பார்த்து, "இது ஆண்டவரின் அருள்வாக்கு" எனக் கூற வேண்டும்.

27. மூன்று வாசகர்களும் இறைவார்த்தையை வாசித்த பின்பு பீடத்தை நோக்கி தலைவணங்கி விட்டு பக்தியோடு செல்ல வேண்டும். (அல்லேலூயா வசனத்திற்கு பின்பு)

## ஏனைய விடயங்கள்.

28. பதிலுரைப்பாடல் வாசிப்பவர், பதிலுரைப்பாடல் என்று கூறாமல், "உங்கள் பதில்" எனக்கூறி அப்பதிலை இருமுறை தெளிவாக வாசிக்கவும். பதிலுரையை ஒரு பலகையில் எழுதி அனைவரும் பார்க்கக்கூடியவாறு வைப்பது நலம்.

29. நற்செய்திக்கு முன் சொல்லப்படும் நற்செய்தி ஆர்ப்பரிப்பை வாசகர் வாசிக்கலாம். அல்லது தெளிவாகப் பாடலாம். அவ்வாறு வாசிப்பவர் பாடிய பின்பு வாசக மேடையை விட்டு அகல வேண்டும். வாசக மேடைக்கு குருவானவர் வரவேண்டும்.

30. வாசகத்திற்கான கருப்பொருள், முதல்வாசகம், பதிலுரைப்பாடல், இரண்டாம் வாசகம், நற்செய்தி ஆர்ப்பரிப்பு, எழுந்திருங்கள், அமருங்கள் ஆகியவற்றை கூற வேண்டியதில்லை. இறைமக்கள் ஏற்கனவே இதனை அறிந்திருக்கின்றனர். மீண்டும் மீண்டும் நினைவுறுத்துவது அவசியமற்றது.

31. திருப்பலியில் வாசிக்கப்படும் இறைவார்த்தைக்கு விமர்சனம் அவசியமாகும். நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால், அடுத்தவர் நம் குறைகளைத் திருத்தும்போது, அதனை நல்ல மனதோடு ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

32. இறைவார்த்தையை எடுத்துரைக்கும் அதே குரலால், மற்றவர்களைப் பழிந்துரைக்கவோ, அவதூறான வார்த்தைகளைப் பேசவோ இடமளிக்கக் கூடாது. "கெட்ட வார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. கேட்போர் பயனடையும்படி தேவைக்கேற்றவாறு அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளையே பேசுங்கள்." (எபே. 4;29) 'கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுள் நிறைவாகக் குடிகொள்வதாக' (கொலோ. 3;16)

33. இறைவார்த்தையை எடுத்துரைப்பவர் ஒரு பேச்சாளரோ நடிகரோ அல்ல, மாறாக அவர் வார்த்தையின் ஆழ்ந்த ஈடுபாட்டிற்கும் திறமைக்கும் இடைப்பட்டவர்.

34. இறைமக்களின் கவனத்தைக் கவரக்கூடிய வகையில் இறைவார்த்தையை எடுத்துரைப்பது; வாசகர், தியாக்கோன், குருவின் பணியாகும். இறைமக்கள் அவ்வார்த்தைக்கு செவிகொடுக்க வேண்டும். இறை வார்த்தையை விவிலியத்தையோ வாசகத் தாளையோ கொண்டு வாசிப்பது செவிமடுத்தல் அல்ல.

35. விசுவாசிகளின் மன்றாட்டை வாசிப்பவர், விசுவாசப்பிரமாணம் முடிவடையும் போது தனது இருப்பிடத்தைவிட்டு எழுந்து, பீடத்தை நோக்கி வந்து, தலை வணங்கி வாசக மேடைக்குப் புறம்பான வேறொரு மேடையை அடைந்து (அதாவது, பீடத்திற்கு இடப்புறமாக இருக்கும் மேடையை அடைந்து) விசுவாசிகள் மன்றாட்டிற்குமுன் குருவானவரின் ஆரம்ப செபம் கூறி முடிந்ததும் மன்றாட்டை ஆரம்பிக்கவும். மன்றாட்டுக்கள் முடிந்த பின்பு, குருவானவரின் விசுவாசிகளின் மன்றாட்டுக்களின் இறுதிச் செபத்திற்கு பின்பு பீடத்தை விட்டுச் செல்லவும். வசுவாச மன்றாட்டை வாசிக்க வேண்டும். பதிலை மாத்திரம் பாடலாம். (அறிவித்தல்களும் இடது புற வாசக மேடையில் வாசிக்கப்பட வேண்டும்.

36. திருப்பலி முன்னுரை, விசுவாசிகள் மன்றாட்டு, அறிவித்தல்கள் போன்றவை பீடத்திற்கு இடப்பக்கத்திலிருக்கும் வேறொரு மேடையிலிருந்து வாசிக்கப்பட வேண்டும்.

37. உலகப்புகழ்பெற்ற வயலின் வித்துவான் "அன்டனி ஸ்ட்ராடிவாரி" என்பவர், "முழுமைக்காக ஏன் இத்தனை பாடுகள்?" என்ற வினாவிற்கு இவ்வாறு பதிலளித்தார். "இறைவனுடைய உன்னதமான இசையை உலகிற்கு எடுத்துச்செல்ல அவருக்கு வயலின் தேவைப்படுகிறது. எனவே, என்னுடைய வயலின் குறைபாடானதாக இருந்தால் இறைவனுடைய இசை எவ்வாறானதாக அமையும்?"

38. வாசகர் வழியாக இறை வனுடைய வார்த்தை இறைமக்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. அவருடைய வார்த்தையை தகுதியான முறையில் எடுத்துரைத்தால், இளமை முதல் முதுமை வரை, கஷ்டமான, நம்பிக்கையற்ற, சோகமான, மகிழ்ச்சியான, திருப்தியான, சௌகரியமான எவ்வேளைகளிலும் ஆண்டவர் அவர்களுடைய வாழ்வில் குடிகொள்வார்.

39. திருப்பலியில் கலந்து கொள்ளும் விசுவாசிகள் வாசகருடன் இணைந்து விவிலியமோ, நாட்காட்டியோ, வாசகத் தாளைக் கொண்டோ இறைவார்த்தையை வாசிப்பது என்பது செவி மடுத்தல் அல்ல.

40. ஒரு வாசகர் ஒரு ஞாயிற்றுக்கிழமை வாசிக்காவிட்டாலும், அவர் தொடர்ந்து ஞாயிறு வாசகத்தை ஆயத்தப்படுத்த வேண்டும். ஒவ்வோர் ஆலயத்திற்கும் ஒரு வாசகர் குழாம் அமைத்து இரு மாதங்களுக்கு ஓர் அட்டவணையை ஆயத்தப்படுத்தி வைத்தல் சிறந்தது.

41. "இந்த இறைவாக்குகளைப் படிப்போரும் இவற்றைக் கேட்போரும் இந்நூலில் எழுதியுள்ளவற்றை கடைப்பிடிப்போரும் பேறு பெற்றோர்" (திருவெளிப்பாடு 1;3).

*அருட்பணி. இக்னேஷியஸ் லொயோலா*
*வருணகுலசிங்கம்.*
*தேசிய வழிபாட்டு இயக்குனர் (2010 - 2016)*

## மலர்ந்திடு பாலா மலர்ந்திடு

மழலை கொஞ்சும் செந்தமிழும் நீரோ
மாதங்களில் மார்கழியோ நீர் மலர மலர்ந்திட்ட மாதம்
மன்னவனே உம் மழலை மொழியினை
கவியால் வடித்திட நான் யாரோ

பாவத்தை களைய பாருலகில் பிறந்திட்ட பாலா
பாசமான உன் உறவை தேடி
பாருலகில் அலைந்திட்ட பாவி நானோ
வந்திடு பாலா வந்திடு

*கு.க.நிரோஜினி (அபேட்சகரி)*
*செபமாலைக்கன்னியர் மடம், (மன்னார்).*

03ம் பக்கத் தொடர்ச்சி.....

## அமைதியின்,.....

வரவேற்கவேண்டிய தேவையை கிறிஸ்து பிறப்பு விழா எமக்கு நினைவூட்டுகிறது. பெத்லகேம் மாட்டுத்தொழுவத்தில் நிகழ்ந்த இந்த எளிமையான பிறப்பு நிகழ்வு முழு உலகிற்கும் மனமாற்றத்திற்கான அழைப்பை விடுக்கும் அதேவேளையில், அடுத்தவரின் தேவையில் பாரபட்சமற்ற வகையில் உதவிக் கரம் நீட்டும் மனநிலையைக் கொண்டு வாழவும் எம்மை அழைக்கின்றது. எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பிரகடனப்படுத்தபட்ட இரக்கத்தின் யூபிலி ஆண்டை நாம் தற்போது நிறைவுசெய்துள்ளோம். யூபிலி ஆண்டு நிறைவடைந்துவிட்டாலும் அவ் ஆண்டின் மனநிலையாகிய அடுத்தவர்பால் கொள்ள வேண்டிய இரக்கமும் பரிவும் எமது வாழ்வின் எல்லா நிலைகளிலும் தொடரவேண்டும்.

மனித உயிரின் பெறுமதியையும் அதன் புனிதத்துவத்தையும் தியானிக்கும் கிறிஸ்மஸ் காலத்தில், அதற்கு இடையூறாக அமைகின்ற கருச்சிதைவு, மற்றும் வேறுவகையான கொலைகள், அழிவுகளை நாம் வன்மையாகக் கண்டிக்க அழைக்கப்படுகின்றோம். இதே வேளை, எமது மனங்களும் எண்ணங்களும் மத்திய கிழக்குப் பகுதியின் சில நாடுகளில் தமது விசுவாசத்திற்காகத் துன்புறுத்தப்படும் சகோதர சகோதரிகள் மட்டில் திரும்புகின்றன.

கிறிஸ்மஸ் நாட்களில் நாம் பலவகையான அன்புப்பணிகளில் ஈடுபடுகின்ற அதே வேளையில், எமது சமுதாயத்தில் பல்வேறு துன்பங்கள், தேவைகளோடு வாழும் மக்கள் மட்டிலும் கரிசனைகொள்ள வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. எமது சுற்றுச்சூழல் மட்டிலும் நாம் இக்காலத்தில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். உணவு வீண் விரயம், மரங்களை வெட்டுதல், அலங்காரங்களுக்காக மிகையான மின்சாரங்களைப் பயன்படுத்தல் போன்றவற்றைத் தவிர்ப்பதன்முலம் நாம் இதனைச் செய்யமுடியும்.

இறைவனின்தூய திட்டத்திற்த எதிரான அனைத்துவிடயங்களிலும் நாம் மாற்றம் கண்டு, அமைதியின், நல்லிணக்கத்தின், ஒப்புரவின் தூதுவர்களாக எம்மை நாம் அர்ப்பணிப்போமாக. இயேசு என்னும் அழகான கொடைக்காக இறைவனுக்கு நன்றிகூறும் நாம், இறைவனின் ஆவியால் புதுப்பிக்கப்பட்டு இறைவன் இயேசுவுக்கு வாழ்வினால் சாட்சிபகரும் மக்களாக வாழ வரம் கேட்போம்.

அனைத்து இறைமக்களுக்கும், எமது நாட்டு மக்களுக்கும், நல்லெண்ணம் கொண்ட அனைவருக்கும் இறை ஆசீர் நிறைந்த கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

*பேராயர் மல்கம் காடினல் ரஞ்சித், தலைவர்,*
*இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை.*

*பேரருட்திரு. டி. வலன்ஸ் மென்டிஸ், செயலர்*
*இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை.*

## மதத்தின்....

என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

மதங்களை முன்னிலைப்படுத்தி அடக்கு முறைகளை மேற்கொள்ளும் அரசுகளைக் காட்டிலும், மத சார்பற்ற அரசுகள் மேல் என்று கூறும் திருத்தந்தை, மத சார்பற்ற அரசு, இவ்வுலகைத் தாண்டிய உண்மைகளை நோக்கி திறந்தமனம் கொண்டிருக்கும்வரை, நன்மைகளைக் கொணரும் என்பதையும் தன் பேட்டியில் தெளிவுபடுத்தியுள்ளார்.

மதத்தின் பெயரால் போரையும் வன்முறைகளையும் தூண்டும்போது, அத்தகைய கடவுள், வெறுப்புக்கும், அழிவுக்கும் காரணமான கடவுள் என்று அறிக்கையிடப்படுகிறார் என்றும், அத்தகைய மதமும், அத்தகைய கடவுளும், மதத்தை நோயுறச் செய்கின்றன என்றும் சுட்டிக் காட்டினார்.

முதல் உலகப் போர் முடிவடைந்து 100 ஆண்டுகள் சென்றபின்னரும், ஐரோப்பா சிறு, சிறு போர்களில் தன் சக்தியையும், இரத்தத்தையும் இழந்து வருகிறது என்று கூறியத் திருத்தந்தை, போர்களை வர்த்தகம் செய்யும் ஆயுத உற்பத்தியாளர்களை, எதிர்க்கும் துணிவு கொண்ட தலைவர்கள் ஐரோப்பாவிற்குத் தேவை என்று எடுத்துரைத்தார்.

அண்மையில் முடிவடைந்த இரக்கத்தின் யூபிலி குறித்து எழுந்த கேள்விக்கு பதில் அளித்தத் திருத்தந்தை, இந்த எண்ணம் இறைவனிடமிருந்து தூண்டப்பட்ட எண்ணம் என்றும், இந்த யூபிலியின் வழியாக இறைவனோடும், ஒருவர் ஒருவரோடும் உருவான ஒப்புரவுகளே இவ்வாண்டு தந்த மிகச் சிறந்த பரிசு என்றும், தன் பேட்டியில் குறிப்பிட்டார்.

ஊடகங்களைப் பற்றிய கேள்விக்குப் பதில் அளித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மக்களுக்கு தேவையான செய்திகளை வழங்கும் உயர்ந்த பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு என்பதை வலியுறுத்திக் கூறியபின், தவறான செய்திகள் மக்களை பாதிப்பதுபோல், பயனற்ற செய்திகளும் மக்களைத் தடுமாறச் செய்கின்றன என்று, தன் பேட்டியில் குறிப்பிட்டார்.

Tertio வார இதழுக்கு அளித்த இப்பேட்டியில், இறுதியாக, குருக்களைப் பற்றி பேசியத் திருத்தந்தை, காயப்பட்ட இயேசுவின் உடலான திருஅவையை, மென்மையுடன் பேணிக் காப்பதற்கு குருக்கள் தயங்கக்கூடாது என்றும், இவ்வுலகிற்கு இன்று தேவையானது, ஒரு மென்மைப் புரட்சி என்றும் கூறி, தன் பேட்டியை நிறைவு செய்துள்ளார்.

## இலங்கையில்...

பத்ததைத் தொடர்ந்து, செயற்கை கிறிஸ்மஸ் மரம் கட்டும் பணி நிறுத்தப்பட்டுள்ளதாக அரசு அறிவித்தது.

கர்தினாலின் வேண்டுகோளைத் தொடர்ந்து, இப்பணியில் ஈடுபட்ட குழுவின் தலைவர் மங்கள குணசேகர,மற்றும், இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய துறைமுக அமைச்சர் அர்ஜுன இரணதுங்கா ஆகியோருடன், இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப்பின், இப்பணி நிறுத்தப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய கிறிஸ்மஸ் மரத்தை கட்டியெழுப்பும் பணிக்கென செலவிடப்பட்ட பணம் அனைத்தும், தனியார் மற்றும் நிறுவனங்களின் நன்கொடைகள் மூலம் திரட்டப்பட்டதாகவும், நாட்டின் பல்வேறு மதங்களிடையிலும், இனங்களிடையிலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே இது திட்டமிடப்பட்டதாகவும் தெரிவித்தார் இப்பணிக்குழுவின் தலைவர் குணசேகர.

UCAN செய்தி நிறுவனத்தின் கூற்றுப்படி, 96 மீட்டர் உயரத்துடன் கட்டப்பட திட்டமிடப்பட்ட இந்த கிறிஸ்மஸ் மரத்தின் பணி, 18 மீட்டருடன் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது, மற்றும், திட்டமிடப்பட்ட செலவில் பாதி அதாவது, 60 இலட்ச ரூபாய் ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது. இம்முயற்சி பின்னர் மீண்டும் தொடர்வதாக பிந்திய செய்திகள் கூறுகின்றன.

## குடும்பங்களை...

முகவரிக்கு அனுப்பி உதவுமாறும் வேண்டுகின்றோம். அத்தோடு மேற்குறிப்பிட்ட விடயங்கள் சார்ந்த நல்ல பழமொழிகள், மணிவாக்குகள், சிந்தனைத் துணுக்குகள், நகைச்சுவை விடயங்கள் போன்றவற்றையும் எதிர்பார்க்கின்றோம். அதிக பயனுள்ளவையெனக் கருதுபவற்றைப் பிரசுரிப்போம். அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலின், அகவொளி குடும்பவள ஆற்றுப்படுத்தல் நிலையம், சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்

## குருக்களாக...

"குருக்கள் அழைப்பு என்ற கொடை" ("The Gift of the Priestly Vocation") என்ற பெயரில் வெளியாகியுள்ள இந்த வழிமுறை ஏடு, 1970 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த மாற்றங்களை உள்ளடக்கி, இன்றையச் சூழலுக்கு ஏற்ற வழிமுறைகளை பரிந்துரைக்கிறது என்று, கர்தினால் ஸ்டெல்லா அவர்கள், தன் பேட்டியில் குறிப்பிட்டார்.

ஒருவர் குருவாக வாழ்வதற்கு, முதலில், அவர் ஒரு முழு மனிதராக, மனிதருக்குரிய் அனைத்து உணர்வுகளையும் ஒருங்கிணைத்தவராக இருக்கவேண்டும் என்பது இந்த ஏட்டில் தெளிவாக்கப்பட்டுள்ளது என்று, கர்தினால் ஸ்டெல்லா அவர்கள் வலியுறுத்தினார்.

'மனிதம்' 'ஆன்மீகம்' மற்றும் 'தேர்ந்து தெளிதல்' ஆகிய மூன்று கருத்துக்கள் குருக்களின் வாழ்வில் அடிப்படை விழுமியங்களாக இருக்க வேண்டும் என்பது இந்த ஏட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று கர்தினால் ஸ்டெல்லா அவர்கள் தன் பேட்டியில் சுட்டிக்காட்டினார்.

## வத்திக்கானில்...

"Lene Thun" என்ற அறக்கட்டளைக்கும், இந்த மரத்தை அலங்கரித்த குழந்தைகளுக்கும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனிப்பட்ட பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்தார்.

கிறிஸ்து பிறப்பு காட்சியை, மால்ட்டா உயர்மறைமாவட்டமும், மால்ட்டா அரசும் இணைந்து, வத்திக்கானுக்கு ஒரு கொடையாக வழங்கி யுள்ளன என்றும், மால்ட்டாவில் கடந்த ஆண்டு நிகழ்ந்த ஒரு போட்டியில் வெற்றி பெற்ற Manwel Grech என்ற கலைஞரின் படைப்பாக, இந்த கிறிஸ்து பிறப்பு காட்சி அமைந் துள்ளது என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## மனிதர்களை....

இவ்வாண்டு நிகழும் கிறிஸ்து பிறப்பு காட்சிகளில் உலகின் அமைதி என்பது மையக் கருத்தாக அமையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாசரேத்து கிராமத்தை போன்ற ஒரு சூழல், Monte Migliore என்ற பகுதியில் அமைக்கப்படும் என்றும், இந்தக் காட்சியைக் காண வருவோர், இந்தக் கிராமத்தின் வழியே நடந்து சென்று, கிறிஸ்து பிறப்பு நிகழ்வில் நேரடியாகப் பங்கேற்கலாம் என்றும் வில்லரேஜியா ஊராட்சி கூறியுள்ளது.

வில்லரேஜியா ஊர் சமுதாயம் மேற்கொண்டுள்ள இந்த முயற்சி, இத்தாலி நாட்டிலேயே மிகப் பெரிய அளவில் உருவாக்கப்படும் கிறிஸ்து பிறப்பு காட்சி என்றும், இம்முயற்சிக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் வாழ்த்துக்களையும், ஆசீரையும் வழங்கியுள்ளார் என்றும் இவ்வூர் தலைவர்கள் கூறினர்.

## இலங்கையின்...

மால்கம் இரஞ்சித், மற்றும், இலங்கைக்கான திருப்பீடத் தூதர், பேராயர் Pierre Nguyen Van Tot ஆகியோரை சந்தித்த வேளையில், இப்பாராட்டுக்களை வெளியிட்டார், அரசுத் தலைவர் சிறிசேனா.

பல்வேறு மதங்களையும் பல கலாசாரங்களையும் கொண்டுள்ள இலங்கையின் இத்தகையப் பாரம்பரியம்,பல நூற்றாண்டுகள் பழமையானது என்ற இலங்கை அரசுத்தலைவர், நாடு முழுவதும் கிராமங்களிலும், நகர்களிலும், புத்த, இந்து, இஸ்லாம்மற்றும்கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங் களைக் காணமுடியும் என கத்தோலிக்கத் தலைவர்களிடம் கூறினார்.




இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2016ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

## நமது மகிழ்ச்சியை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"இம்மானுவேல்" என்ற பெயரோடு நம்மோடு குடிகொள்ளும் இயேசு நம்மை தன் அருள்வரங்களால் நிரப்பி நம் வாழ்வை மகிழ்விக்கின்றார். இயேசுவின் அருளால் நிறைவோடும் மகிழ்ச்சியோடும் வாழும் நாம் இம்மகிழ்ச்சியை நம் அயலவரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். குறிப்பாக தேவையில் வாழ்வோரை இனங்கண்டு எமக்குள்ளதை அவர்களோடு பகிர்ந்து அவர்களின் வாழ்விலும் மகிழ்ச்சி உண்டாக நாம் துணைசெய்ய வேண்டும் இதுவே, உண்மையான கிறிஸ்மஸ் மகிழ்ச்சியாகும். இதில்தான் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் அர்த்தம் பெறுகிறது.

இன்று நம்மைச்சூழ வாழ்வோர் பலர் பல வேதனைகளோடும், எதிர்பார்ப்புக்களோடும் வாழ்ந்துவருகின்றார்கள். தமது தேவையை வெளிப்படையாகச் சொல்லமுடியாதவர்களாக, சொல்லவிரும்பாதவர்களாக தமக்குள்ளே துன்பங்களைச் சுமந்தவர்களாக மௌனமாக அழுதுகொண்டிருக்கிறார்கள். கோரயுத்தத்தின் வடுக்களால் இன்னும் அலைக்கழிக்கப்படுகிறார்கள். இத்தகையோரை நாம் கண்டுகொள்ளாதவர்களாக நாம் மட்டும் மகிழ்வைத்தேடி திருப்திகண்டு கொண்டாடும் நிகழ்வு கிறிஸ்மஸ் கொண்டாட்டமாக அடைந்துவிடாது. எமது ஆற்றலுக்கு ஏற்றவாறு துன்புறும் எம் சகோதர சகோதரிகள் மட்டில் நாம் கரிசனை காட்டி அவர்கள் உள்ளங்களில் ஒரு மகிழ்வின் கீற்று பிரகாசிக்க நாம் துணைசெய்வோமானால் இயேசுவை எம் மத்தியில் பிறக்கவைக்கின்றோம். அப்போதுதான் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் உண்மையான நிறைவான மகிழ்ச்சி பிறக்கிறது.

இத்தகைய மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்மஸ் கொண்டாத்திற்குத்தான் நான் உங்களை அன்போடு அழைக்கின்றேன். இதனால் எல்லாருடைய உள்ளங்களிலும் நிறைவான மகிழ்ச்சி தோன்றும். பாலன் இயேசு உங்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை அர்த்தமுள்ளதாக்கி உங்கள் எல்லாரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக! "புதிதாய் வாழ்வோம்" என்னும் எமது சாட்சிய வாழ்வுப் பயணத்தில் நாம் திடமாகப் பயணிக்க இவ் ஆசீர்வாதம் எமக்கு உதவுவதாக!

இங்ஙனம்<br>
கிறிஸ்துவில் அன்பும் மரி அன்னையில் பக்தியுமுள்ள,<br>
**பேரருட் திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**<br>
யாழ் ஆயர்.

## பொன்விழாக் காணும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1934 இல் பிறந்த அடிகளார், புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வியை நிறைவு செய்த பின், கொழும்பு பல்கலைக் கழகத்தில் 1958இல் இயற்பியல் பட்டம் பெற்று, குருத்துவ வாழ்வில் நுழையும் வரை ஆசிரியராகவும் ஊடகவியலாளராகவும் பணி புரிந்தார். இவரைப் போலவே இவர் சகோதரர்களும் ஆசிரியர்களாகப் புனித பத்திரிசியார் கல்லூரியின் முதுகெலும்பாகத் திகழ்ந்தார்கள். இம்மானுவேல் அடிகளார் தன் குருத்துவக் கல்வியை உரோம் நகரில் மேற்கொண்டு இறையியலிலும் மெய்யியலிலும் பட்டம் பெற்று, வத்திக்கான் புனித பேதுரு பேரால யத்தில் கருதினால் அகாகினியன் அவர்களால் 1966 ஆம் ஆண்டில் அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டபின் நாடு திரும்பினார்.

புத்தாண்டு சேவை புரிந்த பின் மீண்டும் உரோம் நகர் சென்று (1973-1976) ஆய்வுக் கல்வியை நிறைவு செய்துக் கலாநிதி பட்டம் பெற்று நாடு திரும்பிக் கண்டி குருத்துவ மாணவர் கல்லூரியின் இறையியல் பேராசிரியராக 1976 முதல் 1986 வரை பணி புரிந்த பின் யாழ். புனித பிரான்சி சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அதிபராகப் பணி புரிந்ததோடு, குருத்துவ மாணவர்களின் உருவாக்கத்திலும், அவர்களுக்குத் திருச்சபை இறையியலும் ஏனைய பாடங்களும் கற்பித்ததோடு, பொது நிலையினர் உருவாக்கத்திலும் ஈடுபட்டார். அத்தோடு யாழ். மறைமாவட்டத்தில் குருமுதல்வராக இருந்து, குருக்களின் நன்மைகளிலும் அவர்களது தொடர் உருவாக்கத்திலும், அந்தக் காலகட்டத்தில் மாபெரும் இடப்பெயர்வுகள் 1995 யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்றவற்றிற்கு முகம் கொடுத்துத் திருச்சபை மக்களோடு மக்களாகத் தங்களது உடனிருப்பை வெளிப்படுத்த தன் பணிகளை ஆற்றி வந்தார்.

இலங்கைத் தீவில் அவர் உருவாக்கிய பல நூற்றுக் கணக்கான குருக்கள் பன்னாடுகளுக்கும் சென்று பணியாற்றினார்கள்; பணியாற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். அவரது ஐம்பது ஆண்டுப்பணி வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காகவே செலவிட்ட அடிகளார், யாழ். திருமுழுக்கு யோவான் பங்கைச் சேர்ந்த சீமாம்பிள்ளை - செல்லம்மா இணையரின் இரண்டாவது மகனாக 06.01.1934இல் பிறந்தார். இவரது முழுப்பெயர் சீமாம்பிள்ளை யோசப் இம்மானுவேல் என்பதாகும். ஆனால், இன்று அதைச் சுருக்கி அருட்தந்தை சீ.யோ. இம்மானுவேல் என்றால் தமிழ் மக்கள் யாருக்குமே அவரை அடையாளம் தெரியாமல் போய்விடும். எஸ்.யே என்பதே அவரது அடையாளம். ஆனால், அவரோ உலகத் தமிழரின் அடையாளம். அவர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரைத் தான் உரோம் நகரில் கல்வி கற்கும் காலத்தில் வரவேற்றதைப் பெருமையாகக் கொள்வார். ஆனால், உலகம் வாழ் தமிழரோ இவரது சமகாலத்தில் தாம் வாழ்ந்ததைப் பெருமையாக்கொள்கின்றனர்.

ஆன்மீக வாழ்வில் இம்மானுவேல் அடிகளார் 5 திருத்தந்தையர்களைக் கண்டும் பேசியுள்ளார் என்பதோடு, அவர்களில் சிலர் புனிதர்களாகிவிட்டனர் என்பதும் பெருமைக்குரிய விடயமாகும். அவர் உலகமெல்லாம் பறந்து தமிழ் மக்களின் உரிமைக்காய் பணியாற்றி வருகிறார். அவர் நோய் பாராது, முதுமை என்ற சொல்லறியாது, பணச் செலவு நோக்காது பல நெடிய பயணங்கள் மூலம் பன்னாட்டு மன்றங்கள், தூதரகங்கள், ஆய்வு மன்றங்கள் எல்லாம் சென்று பல உலகத் தலைவர்களை எல்லாம் சந்தித்து வருகிறார். தன்னுடைய வயதையும் நோயையும் பாராமல் ஒரு சிறுவனைப் போல், உலகெங்கும் சென்று தமிழ் மக்களின் உரிமைக்குரலாகக் கடந்துபோன எம் வாழ்வின் துன்பியல் அனுபவத்தால் குரலற்ற தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இன்றும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறார். **நன்றி: தொடுவானம்**

## ஒப்புரவில் இயேசு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாறாக, இன்றும் சிலர் பிரிவினைகளை வளர்க்க, பகைமைகளைப் புதுப்பிக்க, பழிவாங்கலில் ஈடுபட சந்தர்ப்பங்கள் தேடி அலைவது கவலைக்குரிய விடயமாகும். மன்னிப்பில், அன்பில் ஒப்புரவில்தான் கிறிஸ்து மீண்டும் மீண்டும் பிறக்கிறார்.

யுத்தம் எவ்வளவு கடினமானதோ, அவ்வாறே ஒப்புரவும் கடினமானது. யுத்தம் செய்வதைவிட ஒப்புரவாவது அதிக கடினமானது என்றுகூட சொல்லலாம். யுத்தத்தின்போது எவ்வாறு பல தியாகங்கள் செய்யப்பட்டதோ, ஒப்புரவின்போதும் தியாகங்கள் அவசியம். தியாகங்களின்றி, தாழ்ச்சியின்றி, விட்டுக்கொடுப்பின்றி ஒப்புரவு சாத்தியமற்றது.

இயேசுவின் ஒப்புரவுப்பணி அவருடைய தியாக வாழ்வினால்தான் சாத்தியமானது. சிலுவையில் தொங்கியபோது தன் பகைவர்களை மன்னித்தது இயேசுவின் ஒப்புரவுப் பணியின் உச்சக்கட்டம் அல்லது அவரது அப்பணியின் வெற்றியின் இரகசியம் என்று கூறலாம்.

இயேசுவின் பிறப்புவிழா எமக்கு அர்த்தமுள்ளதாக அமைய எமது வாழ்வில் வரும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் ஒப்புரவின் சந்தர்ப்பங்களாகப் பயன்படுத்துவோம். உண்மையான ஒப்புரவில்தான் அமைதி, மகிழ்ச்சி என்பன பிறக்கின்றன. இயேசு பிறக்கின்றார்.

அருட்திரு. ப. யோ. ஜெபரட்ணம்<br>
குரு முதல்வர்<br>
யாழ். மறைமாவட்டம்

## இரக்கத்தின் ஆண்டின்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கறை காட்டப்பட வேண்டும். குறிப்பாக வருகின்ற ஆண்டில் பங்கேற்பு அமைப்புக்கள் அனைத்தையும் உருவாக்கவும், வலுப்படுத்தவும் முயற்சிப்போம். ஆலய, பங்கு, மறைக்கோட்ட மேய்ப்புப் பணிப் பேரவைகளை, விதிமுறைக்கு அமைய உருவாங்கி மறைமாவட்ட மேய்ப்புப்பணி சிறப்பாக இயங்க ஒத்துழைப்பு வழங்குங்கள்.

மேலும் அன்பியங்கள் உருவாக்கப்படுவது சிறப்பான குழும வாழ்வை வாழ உதவும் என்பது மேய்ப்புப்பணி மாநாட்டின் முன்வைப்பாகும். விளிம்பு நிலையில் உள்ள மக்களை தேடிச் சென்று அரவணைக்க அன்பியங்களை உருவாக்குவது ஒரு சிறந்த வழியாகும். எவ்வாறு தூய யோசவ்வாஸ், மேய்ப்புப்பணி ஆர்வத்துடன் ஆன்மீக அநாதைகளாக இருந்த இலங்கை கத்தோலிக்கரைத் தேடி வந்தாரோ அது போல அன்பியங்களின் வழியாக நாமும் எமது பங்குகளில் விளிம்பு நிலையில் உள்ள மக்களை தேடிச்சென்று சான்று பகரும் குழுமங்களாக வாழ முயலுவோம். ஆகவே வருகின்ற ஆண்டில் அன்பியங்கள் உள்ள பங்குகளில் அவற்றை வலுப்படுத்தவும், இல்லாத பங்குகளில் அவற்றை உருவாக்குவதன் மூலம் அனைவருக்குமான இல்லமாக எமது பங்குத் திருச்சபைகளை மாற்றவும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தூய யோசவ்வாசை இலங்கைக்கான திருத்தூதுப் பணியிலே அருகிருந்து வழி நடத்திய தூய அன்னை எங்கள் அனைவரையும் எதிர்வரும் ஆண்டிலே அர்த்தமுள்ள திருப்பணியில் வழிநடத்துவாராக. அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து இறையாசீர் வேண்டி நிற்கின்றோம்.

*இங்கனம்*<br>
*கிறிஸ்துவில் அன்பும் மரி அன்னையில் பக்தியுமுள்ள,*<br>
*பேரருட் திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்*<br>
*யாழ் ஆயர்.*

## தாழ்ச்சி என்றால்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தாழ்ச்சி என்பது, தன்னை பற்றி குறைவாக நினைப்பது அல்ல, மாறாக, தான் என்ற எண்ணத்தை குறைப்பது.

தாழ்ச்சி என்பது, தன் கருத்துக்களை அடக்கி வைப்பது அல்ல, மாறாக, பிறரது கருத்துகளுக்கு மதிப்பு தருவது.

தாழ்ச்சி என்பது, தன் திறமைகளை மறைப்பது அல்ல, மாறாக, பிறர் திறமைகளையும் பாராட்டுவது.

தாழ்ச்சி என்பது, தன்னைப்பற்றி குறை கூறுவது அல்ல, மாறாக, பிறரின் குறையை மிகைப்படுத்தாமல் இருப்பது.

தாழ்ச்சி என்பது, தன்னை விலக்கிக் கொள்வது அல்ல, மாறாக, பிறருக்கு முக்கியத்துவம் தருவது.

தாழ்ச்சி என்பது, தனது உரிமைகளை விட்டுக்கொடுப்பது அல்ல, மாறாக, பிறரின் உரிமைகளைப் பறிக்காமல் இருப்பது.

இத்தகையத் தாழ்ச்சியை வாழ்ந்து காட்டுவோமா?

■


## 80வது பிறந்தநாளைக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நினைவு என்பது, நமக்குமுன் வாழ்ந்து சென்ற, பெற்றோர், தாத்தா பாட்டிகள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வாழ்வின் அடையாளங்களை மட்டுமல்ல, மீட்பு வரலாறு முழுவதும், பிரசன்னமாக இருக்கின்ற, இறைவனைப் பற்றிய நினைவைக் கொண்டிருப்பதுவே, மிகவும் சிறப்பான நினைவு என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

வரலாற்றிலும், நம் தனிப்பட்ட வாழ்விலும், கடவுளுக்குப் பிரமாணிக்கமாக இருந்த வியத்தகு நேரங்களும்,பாவத்தின் நேரங்களும் இருந்ததைக் காண்கிறோம், ஆயினும், ஆண்டவர், தம் கரங்களை விரித்தவண்ணம், உன் பாதையில் முன்னோக்கிச் செல் என்று, நம்மிடம் சொல்வதை உணர்ந்துள்ளோம், என்றும் அவர் கூறினார்.

1936ம் ஆண்டு டிசம்பர் 17ம் தேதி, அர்ஜென்டினா தலைநகர் புவனோஸ் அய்ரெஸ் நகரில் பிறந்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.




பாதுகாப்புப் படையினரால் யாழ். தூய மரியன்னை பேராலயத்தில் நடத்தப்பட்ட கரோல் கீதங்கள் நிகழ்ச்சி

## புதிதாய் வாழும் குடிலில் வதிந்திட வாராய் குலமகனே!

இறைதந்தையின் பரிவுள்ளத்தினதும்
நிறை வாழ்வருளும் இரக்கத்தினதும்
விடியலாய் விண்ணகம் விட்டே
மடிந்திடும் மண்ணவர்க்காய்ப் பிறந்தவரே!

மார்கழிக்கடும் குளிர்மேவும் பொழுதினில்
காரிருள் சூழ்ந்திடும் நடுநிசிதனில்
பாரின் ஒளியாய் உதித்த பாலகனே
வாரீர் எம் இதயக் குடிலில் உறைந்திடவே!

இரக்கத்தின் ஆண்டினூடே பயணித்தே
அரக்கத்தின் ஆதிக்கம் அழிக்க முற்பட்டும்
மரத்துப் போயுள்ள மாசு நிறை மனங்களை அன்பின்
அரம் கொண்டு தீட்டிட நீ வாராயோ

புதிய மாற்றங்களும் மாஜைகளும் - மாந்தர்
வதியும் உலகில் வருத்துகின்றதே நாளும்
எரியும் சுடராய் ஓங்கும் சுயநலன்கள் அணைக்க
புரிந்திடச் சிந்தையின்றி வாழ்கின்றனரே

புதிதாய் வாழும் பணியில் புறப்படுகையில்
சதியாய் முழங்கும் பழமைகளை அகற்றியே
விதியாய் கொள்ள மறுக்கும் மனித நேயத்தினை
பதிய வைத்திடாயோ பற்றறுக்கா மனங்களில்

போரின் நாட்களில் பட்டறிந்த துயரங்கள்
வேரின் தொடராய் மனங்களில் படர்ந்திருக்க
ஊரில் தொடரும் வாட்கலகமும், தற்கொலையும்
காரிருளாய் கனதி கொள்கின்றதே காப்பவர் கதியின்றி

கட்டடங்களும் கண்கவர் கலையம்சங்களும்
தொட்ட இடமெங்கும் புதிதாய் துலங்குகையில்
பட்ட மனங்களோ பாவமகற்றத் துணியவில்லை தியாகத்
தொட்டிலில் மலர்ந்த தூயவனே தூய்மையாக்க வாராயோ

வனங்கள் மாறி வயல்களாகும் தருணமிதில்
மனங்கள் மாறக் காலங்கள் தாமதிப்பதேனோ
மாற்றங்களை நாம் மனங்களில் ஏற்காத பட்சத்தில் - துர்
நாற்றமிகு நீரோடைகளாகவே நாளும் வாழ்வோம்

மணிக்கொரு கொள்கைதனை பிரசவிக்கும்
கணினிக் கால மாந்தரிடையே ஏன்
தொனிப்பொருளாய்க் கொள்ள முடிவதில்லை
இனி வாழ்வோம் "புதிய மனங்களாய்"!

நிறுத்திடுவோம் அநீத வன்முறைகளை வாழ்வில்
பொறுத்திடுவோம் அயலவர் புரியும் அரக்கத்தனங்களை
வெறுத்திடுவோம் பாதகச் செயல்களை என்றும் - மனங்களைப்
பெறுமதியாக்கிடுவோம் குலமகன் வதியும் கோயில்களாக!
இதோ!
புதிதாய் வாழ்ந்திட வருகின்றோம் - அருளின்
பதியாய் இதயக் குடிலில் உறைந்திடு பாலா!

S.M.வுளோறன்ஸ்
(இளவாலை)



### கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம்



கச்சதீவில் டிசம்பர் 23ம் திகதி திறக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலயம்.

### கனடா ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட்திரு. சார்ள்ஸ் கொலின்ஸ் அடிகள்



புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளராகவும் பாதுகாவலன் ஆசிரியராகவும் இதுவரை பணியாற்றிய அருட் திரு. சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் கனடாவின் ரொரன்ரோ மாநிலத்தில் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனராக பொறுப்பேற்று கனடா பயணமாகிறார். பாதுகாவலன் சார்பாக எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு அடிகளாரின் புதிய பணி சிறக்கவும் இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் 18.12.2016 அன்று நடத்தப்பட்ட கரோல் கீத நிகழ்வின் பதிவுகள்



இராணுவத்தினரால் அண்மையில் விடுவிக்கப்பட்ட ஊறணியில் புனித அந்தோனியார் ஆலயம் காணப்பட்ட இடம்

### வருந்துகிறோம்

கிறிஸ்மஸ் சிறப்பிதழுக்கு வாசகர்கள் பலர் தங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பியிருந்தீர்கள். எமது மனமார்ந்த நன்றிகள். இடநெருக்கடி காரணமாக அவற்றை பிரசுரிக்க முடியாமைக்கு, அல்லது முழுமையாக பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். தகுதியானவை எதிர்வரும் இதழ்களில் பிரசுரமாகும்.

- ஆசிரியர்